REGD. M. 4642,

# திராவிட நாடு

மலர் 6 | 21–9–47 | இதழ் 17

## முதலடிதான் பாடுகிறாய்!

—(o)—

[ கோவை. இளஞ்சேரன் ]

எனதருமைக் கருங்குயிலே!
எனைமயக்கும் இசைப்படமே!
உனதருமைக் குரலெடுத்து
உவகைதரும் பாட்டிசைப்பாய்!
மனதறுத்த அடிமை நிலை
மடிந்துவிட்ட தினியிங்கே
தனதாட்சித் தொடக்கமெனத்
தலை நிமிர்த்திக் கூவிடுவாய்!

"வெளிக்கதவைத் திறந்துவைத்து
வெண்கழுகை விரட்டி விட்டேன்!
களிக்கின்றேன் விடுதலையால்;
கவிக்குயிலாய்ப் பறக்கின்றேன்;
குளிக்கின்றேன் தன்னுரிமைக்
குளத்தினிலே" எனக்குதித்துத்
தெறிக்கின்ற 'பல்லவியைத்'
தெள்ளமுதாய்க் கூவிடுவாய்!

பல்லவியைப் பாடுவதால்
பாட்டினது முதலடிதான்
சொல்லுகின்றாய் கருங்குயிலே!
சொத்தெல்லாம் தனதென்னும்
பொல்லாத பருந்தினது
பொந்துக்குள் இருப்பதனை
வெல்லுவதால் மற்றடியை
விரித்திடலாம். முயற்சிப்பாய்!

அலுப்பின்றி உழைப்பின்றி
அடுத்தவனைச் சுரண்டுகின்ற
உலுத்தரேனும் கோட்டான்கள்.
உன்னகத்தில் வாழ்வதனைக்
"கழுத்தினிலே கைவைத்துக்
கவிழ்த்து விட்டேன்" எனுஞ்சரணம்
எழுப்புவதே உன்பாட்டின்
இறுதியடி. முயற்சிப்பாய்!

16-ம் பக்கத் தொடர்ச்சி

டங்கள் எல்லையற்றவை. ஒன்றிரண்டைப் பாருங்கள்.

துப்பாக்கியால் சுட்டதாகக் கூறப்பட்ட வழக்கில் சந்தேகத்தின் பேரில் சிலர் கைது செய்யப்பட்டார்கள். லைசென்சுபெற்றுத்துப்பாக்கிவைத்திருந்தசிலர் இந்தவழக்கில் விசாரிக்கப்பட்டார்கள் நீதிமன்றத்தில். வழக்கை விசாரித்த நீதிபதி மலையாளி. அவருக்குத் தமிழ் தெரியாது. வக்கீலின் வாதம் நடந்து கொண்டிருக்கும்போது நீதிபதி கூண்டில் நிற்பவரிடம் "வெடி வச்சோ" என்று நேரடியாகக் கேட்டார். மலையாளமே தெரியாத குற்றவாளிக்கூண்டில் நிற்கும்தமிழன் "ஆமாம்" என்றான். உடனே அவனுக்குப் பத்துவருடத் தண்டனை கொடுக்கப்பட்டது. எல்லோரும் திகைத்துப் போனார்கள். மலையாளத்தில் 'வெடி வச்சோ' என்றால் சுட்டாயா? என்பது பொருள். லைசென்ஸ்பெற்றுத் துப்பாக்கி வைத்திருக்கும் தமிழன் துப்பாக்கி வைத்திருந்தாயா என்று கேட்கிறார், என்று எண்ணி ஆமாம் என்றான். மொழி தெரியாத அதிகாரியால் நிரபராதிக்குத் தண்டனை கிடைத்தது. இன்னும் எவ்வளவோ அனர்த்தங்கள் நடைபெற்று வருகின்றன. இதையுத்தேசித்து இங்குள்ள தமிழர்கள் தமிழர்களைத்தமிழிடங்களில் உத்யோகஸ்தராக நியமிக்க வேண்டும், அல்லது தமிழ் தெரிந்தவரையாவது நியமிக்கவேண்டுமென்று பல காலமாகக் கேட்டுவந்தார்கள்; வருகிறார்கள். இதுவரை இந்தக் காரியங்கூட நடை பெறவில்லை.

சமீபகாலம் வரையிலும் தமிழர் வாழுமிடங்களில் தமிழ்ப் பள்ளிக்கூடங்களே இல்லாமலிருந்தது. இப்போதுதான் இதன் ஆரம்ப அத்தியாயம் பூர்த்தியாயிருக்கிறது. தமிழ் மொழியின் ஆர்வத்தால் இங்குள்ளவர்கள் வெளியிடம் சென்றும் மற்றும் தமிழ் படித்து முன்னுக்கு வந்தவர்கள். சிறு பிராயத்தில் கவிமணி தேசிக விநாயகம் பிள்ளைகூட மலையாளமே படிக்க நேர்ந்தது. அக்காலத்தில் தமிழ்ப் பாடசாலைகள் மருந்துக்குக்கூட இல்லை. இன்றும் சொல்லப்போனால் தமிழ் மொழிக்கும் தமிழருக்கும் இங்கே மதிப்பு இல்லையென்பதோடு மரியாதைக் குறைவாகவும் நடத்தப்பட்டு வருகிறது.

திருவாங்கூர் யூனிவர்ஸிட்டியில் தமிழுக்கு ஸ்தானமேயில்லை. தமிழ் மொழி வளர்ச்சிக்காக டாக்டர் அழகப்பச் செட்டியாரால் கொடுக்கப்பட்ட ஒரு லட்சம் ரூபாய் வடமொழி வளர்ச்சிக்காக ஸர். ஸி. பி. ராமசாமி அய்யரால் உபயோகப் படுத்தப்பட்டு விட்டதாம்.

தமிழ் நாடாயிருந்தகாரணத்தால், திருவாங்கூரிலுள்ள பழைய கல்வெட்டுகள் எல்லாம் தமிழிலேதான் காணப்படுகின்றன. இந்தக் கல்வெட்டுகளை ஆராய்ந்தறியும் அதிகாரி பரிசுத்த மலையாளி. இவர் ஆராய்ச்சி எப்படியிருக்குமென்று எண்ணிப் பார்த்தாலே வேதனை தோன்றுகிறது. பண்டையத்தமிழ் வார்த்தைகளுக்கு தோன்றியமுறையில் அர்த்தம்கூறிப் புதுமையான சரித்திரத்தை ஸ்ருஷ்டித்து வருகிறார். நாஞ்சி நாட்டில் ஆரல்வாய் மொழி என்ற ஊரிலுள்ள கரைக்கோட்டையைக் காரைக்குடி என்று திருவாங்கூர் சரித்திரத்தில் ஒரு மலையாள வக்கீலால் குறிப்பிடப்பட்டு, அந்தப் புத்தகம் மெட்ரிகுலேஷன் வகுப்புக்குப் பாடமாகவும் வைக்கப்பட்டிருந்தது. அதாவது வெப்ப காலங்களில் திருவாங்கூர் மன்னர்கள் கரைக்கோட்டையில் சென்று தங்குவார்களென்பதற்குக் காரைக்குடியில் சென்று தங்குவார்கள் என்று அழுத்தமாக எழுதி வைத்துவிட்டார். இன்னும் எவ்வளவோ தவறான செய்திகளையும் திருவாங்கூர் சரித்திரத்தில் இந்தப் பெரியார் எழுதிவைத்திருக்கிறார். இந்தப் புத்தகம் திருவாங்கூர் சர்க்காரின் ஆதரவில் வெளியிடப்பட்டிருக்கிறது.

தமிழுக்கும் தமிழருக்கும் இப்படி நேர்ந்த ஆபத்தைச் சகிக்கமுடியாமல் 15 லட்சம் தமிழர்களும் குமுறினார்கள். பல காலமாக, மனுப் போட்டார்கள். திவான்மார்களைப் பேட்டி கண்டார்கள். அழுதார்கள். அழுத பிள்ளைக்குப் பால் கிடைக்கவில்லை.

தமிழர் சங்கங்கள் ஏராளமாகத் தோன்றின. எங்கும் தமிழ் என்ற பேச்சுக் கிளம்பியது. தமிழ் நாட்டிலிருந்து பெரியார்கள் அழைக்கப்பட்டுப் பிரசங்கங்கள்நடைபெற்றன. மகாநாடுகள் பல நடைபெற்றன. வாலிபர்கள் முன் வந்தார்கள். தமிழர்களின் நியாயமான உரிமை வழங்கப்பட வேண்டுமென்றும் இல்லாவிட்டால் போராட்டம் ஆரம்பிக்கப்

(5ம் பக்கம் பார்க்க)

15-ம் பக்கத் தொடர்ச்சி

னும் இவ்விருபதாம் நூற்றாண்டில், ஏன் குறிப்பிட்ட தொழிலுக்குக் குறிப்பிட்ட ஜாதியெனக் குறிக்க வேண்டும்? செருப்புத் தைப்பவன் கீழ் ஜாதி சக்கிலியன் என்றால், அத்தொழிலை நாகரிக முறையில் செய்பவரும் அப்படித்தானே?

இதை 'உயர் குலத்தோர்' உணராததேன்? உண்மைக்கு இடமில்லையா? அல்லது ஒப்புக்கொள்ள உள்ளமில்லையா? இந்தஅர்த்தமற்ற 'உயர்ஜாதி' ஊழல்கள்இன்றுபத்திரிகைஉலகிலும் நிலவுகின்றன. முட்டாள்தனமான கதா பாத்திரங்களின் பெயர்கள் கந்தன், முனியன், கருப்பன். புத்திசாலித்தனமான பாத்திரங்களின் பெயர்கள் ரகுபதி அய்யர், கோபால்சாமி முதலியார் என்பன. திருடுபவன் கருப்பன். தீர்ப்பளிப்பவர் குருசாமி அய்யர் அல்லது சிங்காரவேல் பிள்ளை. கருப்பன் திருடினான், குருசாமி தீர்ப்பளித்தார் என்றால் என்ன குறைவு? உறங்கிக்கிடக்கும் சமூகமே எழுந்து நிற்கமாட்டாயா?"

[சிலம்பு]

கல்வி மந்திரி அவனாசிலிங்கனார் தாம் கொண்ட போக்கில் சற்றும் மாறுதலில்லாமல், உத்தரவை வற்புறுத்துவதில் ஆசை கொள்வாரானால் தாராளமாகச்செய்யட்டும். பகுத்தறிவுக் கருத்துக்களை எடுத்துக் கூறத் தயங்காத ஆசிரியர்கள் எடுத்துக் கூறியே தீருவர். தண்டிக்கப்பட்டுப் பள்ளியின் வெளியே தமிழாசிரியர்களும், பிற ஆசிரியர்களும் தள்ளப்பட்டால், வெளிப்படுவோர் விடுதலை வேட்கைகொண்டெழுந்து கிளர்ச்சி செய்து வெற்றி பெறுவர் என்பது திண்ணம். இத்தகைய வெற்றிகளைத் தாங்கியே வரலாற்றுச் சுவடிகள் காட்சியளிக்கின்றன. சாக்ரடீஸ் காலத்திலிருந்து சன்யாட்சன்காலம் வரையிலும் அறிவுக்கு எதிராக விதிக்கப்பட்ட சட்டதிட்டங்களெல்லாம் சுக்கு நூறு ஆக்கப்பட்டனவே யல்லாமல் என்றும் நிலைபெற்றிருந்தது கிடையாது. ஆகவே தமிழாசிரியர்கள் தமிழ்ப் பள்ளிகளிலிருந்து தண்டிக்கப்பட்டுத் தள்ளப்பட்டார்கள் என்ற மீளாப் பழிச் சொல்லைத் தமிழகத்தின் கல்வி அமைச்சராக விளங்கும் அவனாசியார் ஏற்க வேண்டாம் என்று எச்சரிக்கிறோம்.

இலங்கை 15 சதம் மலாய்நாடு 12 காசு

விலை 2 அணா | திராவிடநாடு | ஆண்டுசந்தா ரூ 7

வாழ்க்கைச் சிக்கல்.

# சோணாசலம்

சோணாசலம், சொன்ன சொல் தவறாதவன் என்ற நற்பெயர் எடுத்தவன். பலருக்கு உபகாரம் செய்தவன். தன்னால் முடிந்த உதவியைச் செய்ய அவன் எப்போதுமே தவறுவதில்லை. பலர், அவனைப்பாராட்டியுமிருக்கிறார்கள். ஓரிருகாரியவாதிகள் மட்டும், சோணாசலத்தின், "பைத்யக்கார" சுபாவத்தைப்பற்றி, கேலியாகப் பேசுவதுண்டு.

"இந்தச்சோணாசலம்இருக்கிறானே, தன்னால் எவ்வளவு தாங்கமுடியும் என்ற கணக்கேதெரியாதவன். எதற்கும், முன்னாலே நிற்கிறான். பணம் நிறைய வைத்துக்கொண்டிருப்பவர்கள், பத்து ரூபா தருவதற்குயோசிக்கிறார்கள், இவன் தாராளமாகக் கொடுத்துவிடுகிறான். பசி, என்று எவனாவது கூறிவிட்டால் போதும், மடியிலே எட்டணா இருந்தாலும், ஒரு ரூபாய் இருந்தாலும் சரி, எடுத்துக்கொடுத்துவிடுகிறான். பைத்யக்காரன்! இப்படிக் கைக்காசைச் செலவழித்துவிட்டு,இவன் 'ஓட்டாண்டி' யாகிவிட்டா, பிறகு, இவனுக்கு உதவி செய்ய யார் வருவார்கள்!கஷ்டப்படும்போது தெரியும் இதெல்லாம்"—என்று பேசினார்கள்.

சோணாசலம், "ஓட்டாண்டி" யாகிவிட்டான்-ஒருகுற்றமும்அவன்செய்யவில்லை. அவன் செய்துவந்தது, "லுங்கி" வியாபாரம். கைலித்துணியை,வெளிநாடுகளுக்குஅனுப்பிவந்தான். காசும் கொஞ்சம் சேர்ந்தது. என்னகுறைந்தாலும், உருப்படிக்கு, மூணுரூபாய் இலாபம் வந்தது — எனவே, உற்சவம் என்றால் 50, பஜனைக்குப்பத்து, பசித்தவனுக்குக்கால்,அரை,இப்படிப் பலருக்கும் உதவி செய்துவந்தான். தன்மகளுக்கும், பத்துச் சவரனில் கழுத்துக்குச் செயின், எட்டுச் சவரனில் புதுமோஸ்தர் கைவளையல்-இப்படி நகைகளும் செய்தான். கையிலே பணமும், ஊரிலே பெயரும், இருப்பதைக்கண்டு பூரிக்க, பெரியநாயகிதான் இல்லை—அது ஒருபெரியமனக்குறை சோணாசலத்துக்கு. அடிக்கடி தன்மகளிடம்சொல்லுவான், "உங்க அம்மா, பெரியநாயகி இருந்தா, உனக்குச் செயின்செய்ததைக்கண்டு பூரிச்சிப்போயிருப்பா" என்று கூறி ஆயாசப்படுவான்.

பெரியநாயகி, அந்தச் செயின் செய்ததையும் காணவில்லை, பிறகு, அது, மார்வாடி கடையில் விற்கப்பட்ட காட்சியையும், காணவில்லை!!

கைலி வியாபாரத்துக்கு நெருக்கடிவந்தது, சோணாசலத்தின் சொத்தும் கரையலாயிற்று. வியாபாரந்தானே, குவிகிறபோது இருக்கிற வேகத்தைவிட, அதிக வேகமாகத்தானே கரையும். உருப்படி ஒன்று இருபத்துநாலுக்குக் கொள்முதல்—மார்க்கெட்டு மள மள வென்று இறங்கி, பனிரெண்டு, பதினொன்றுக்கு வந்துவிட்டது. சோணாசலம், "ஓட்டாண்டியாக" நேரிட்டது. அதே வருஷந்தான், மகளுக்கும் கலியாணம்.

அடுத்த வருஷம் நிலைமைசீர்படும் என்று பார்த்தான்—இல்லை! அதற்கு அடுத்தவருஷம், நிலைமை அதைவிட மோசமாகிவிட்டது. உருப்படிகள் ஒவ்வொன்றும், அவனைப் பிடித்துக் கடிக்கும் பாம்புகளாயின! சோணாசலம், நொடித்துப் போய்விட்டான்.

பிரபல கைலிவியாபாரி சோணாசலத்தின், ஒரே மகளைக்கலியாணம் செய்துகொண்ட தீனதயாளன், தீப்பொறி பறக்கும் கண்களுடன், மாமனாரைப்பார்த்துச் சொன்னான்,

"வருஷம் ஏழானாலும் சரி, சீர் சரியாகச்செய்தாலொழிய உன்மகளை நான் வீட்டுக்கு அழைத்துச்செல்ல முடியாது. என்னால் அந்த அவமானத்தைத்தாங்கவேமுடியாது"என்று.

உன் மகள்! என்மனைவி என்று கூடச்சொல்ல அவனுக்கு மனம் இல்லை! அவ்வளவு கோபம்!!

சோணாசலம், ஏதேதோ முயற்சி செய்தான். யாராருடைய உதவியையோ கோரினான். பலன் இல்லை.

* * *

அதோ, தள்ளாடிக் கொண்டு போகும் அந்த ஆளைப்பாரும்-அவன்தான் சோணாசலம்.

நோயோ?

ஆமாம்! வறுமை நோய்! மருந்து, மலை மலையாகக் குவித்துவைக்கப்பட்டிருக்கிறது. ஆனால் இவனுக்குத்தர மாட்டார்கள். இவன் வறுமைநோயினாலேயே நொந்து, நொருங்கி, நசித்துப்போக வேண்டியதுதான். இவனிடம் இரக்கம் காட்டுபவர் யாரும் இல்லை!

இவனிடம் இரக்கம் காட்டஒருவராவது இருந்தால், அவன் முகத்திலே அவ்வளவு கவலை தோன்றாது—கண்களிலே கப்பிக்கொண்டிருக்கும் சோகத்தைக் கவனித்து மருந்திட யாரும் முன்வரவில்லை. என்னமோ பேசுகிறான், கேட்போம்.

* * *

சோணாசலம் சோகக் குரலிலே பேசுகிறான்:—

சித்திரவதை செய்கிறானே, எப்படிநான் அதைத்தாங்குவேன்.

கலியாணமாகி மூன்று வருஷமா

கிறது—காதசன் ஆயிரம் ரூபாயாவது சீர் செய்தால்தான் பெண்ணை வீட்டிற்கு அழைத்துச்செல்ல முடியும் என்கிறான். அடே,அப்பா, நான் நொந்து போயிருக்கிறேன் — வியாபாரத்திலே நொடித்துப் போய்விட்டேன்-கொஞ்சம் இரக்கம் காட்டு, என்று கெஞ்சுகிறேன் — முடியாது என்கிறான்.

பொண்ணோ! வீட்டிலே தேம்புகிறாள்.

மற்றவர் வீடுகளிலே எல்லாம், கொண்டாட்டம், மருமகப்பிள்ளைகள் வந்திருக்கிறார்கள். ' என் மகளின் மனம் என்னபாடுபடும்.?

* * *

சோணாசலத்தின் சோகத்துக்காக அந்த ஊரிலே, வழக்கமாக நடைபெறும் எந்தக்காரியமும் நின்றுவிடவில்லை. பஜனை, பாட்டு, ஆடல்,தேர், திருவிழா, எலக்ஷன், சகலமும் சிறப்பாக நடந்துகொண்டே இருந்தன. சோணாசலம் 'டல்லாகி'விட்டான், ஆகவே அவனிடம் 'உதவி' பெற, யாரும் வருவதில்லை.

"சித்திரவதை செய்கிறானே பாவி"! என்று சோணாசலம் கூறிக்கொண்டு, பாதை ஓரத்திலே நின்றுகொண்டு, யாருடைய வரவுக்காகவோ, எதிர்பார்த்துக்கொண்டிருந்தான். அவன் எதிர்பாராத ஒருவன், ஆனால்சற்றுப்பழக்கமுள்ளவன், அவ்வழி வந்தான். சோணாசலத்தைக் கண்டு, 'லோகாசாரப்படி' பேசினான்.

* * *

(வழியே ஒருவர் வருகிறார்)

ஒருவர்,- சோணாசலம்! ஏப்பா! என்ன இந்தவருஷமாவது, மாப்பிள்ளைக்கும் உனக்கும் இருக்கிற மனஸ்தாபம் தீர்ந்து, வந்திருக்கிறானா வீட்டுக்கு?

சோ:- வருவதாகத்தான் சொல்லி அனுப்பி இருக்கிறார்.

ஒருவர்:- என்னமோ போ! கல்யாணம் செய்தும்சுகமில்லே, அவனுக்கு இந்த மூணுவருஷமா. கலியாணத்தைச்செய்த கையோடு கையா அவனுக்குச் செய்யவேண்டிய சீர்வரிசையைச் செய்துமுடிச்சுவிட்டா, அவன் நிம்மதியாகஇருந்திருப்பான். வீணாக அவனையும் அலைய வைத்துவிட்டே, உன் மகளுக்கும்தான் மனதுக்கு விசாரம்; என்னமோபோ,இந்தவருஷமாச்சும், சுகப்படட்டும் மாப்பிள்ளை.

(போகிறான்)

சோ:- மடையன்! என்கஷ்டத்தை உணரவில்லை, நான், மாப்பிள்ளை மனதை நோகச்செய்ததாகச் சொல்கிறான். துளியாவது ஈவு இரக்கம் இருந்தா இப்படிச்சொல்ல மனம் வருமா? எங்கே போறது, பணத்துக்கு. வந்து ஆர்பாட்டம் செய்யப் போகிறான். வாய்க்கொழுப்பு,சொல்லியும்விட்டேன், வாப்பான்னு. வீட்டிலேவந்து, அந்தப்பெண் எதிரே, என்மானத்தை வாங்குவானேன்னு தான் வருகிறபாதையிலே காத்துகிட்டு இருக்கறேன்—காலிலேவிழுந்தாவது கெஞ்சிக்கேட்டுக்கொள்வோம்னு. என்ன சொல்கிறானோ!

(அவ்வழியே ஒருவாலிபன் வருகிறான். அவனைக்கண்டதும் சோணாசலம், மரியாதையுடன் பேசுகிறான்.)

சோ:- தம்பி! வாப்பா! வா!

வா:- இதென்ன, நடுத்தெருவிலேயே உபசாரம். வீட்டுக்குப் போகலாமே.

சோ:- போகலாம்பா, போகலாம்.

வா:- புறப்படுங்க, ஏன், யாருக்காகப் பார்த்துகிட்டு இருக்கிறீங்க. வண்டியா? வேண்டாம். நான் ரயிலே விட்டு இறங்கி, சாமான்களை எல்லாம் ஓட்டலிலே ஒரு அறைவாடகைக்குப் பேசிவைத்துவிட்டு,நடந்து வந்தேன், எப்படி இருக்கிறீங்க, என்னு நிலைமைன்னு பார்த்து விட்டுப் போக.

சோ:- என்னைப் பார்த்தாத் தெரியலே யாப்பா உனக்கு, நீ நல்ல குணமுடையவன் — படிச்சவன்—என் மனதைத் திறந்து உன்னிடம் பேசுகிறேன். நானும் மூன்று வருஷமா, எவ்வளவோ முயற்சிசெய்து தான் வர்ரேன்.

வா:- அதுக்கென்ன செய்யறது. அததுக்குக் காலம் கூடிவரவேணுமில்லோ. போவுது. இப்ப எல்லாம் சரியாகப் போவுது. என்னென்ன சீர் செய்யறதா உத்தேசம்.

சோ:- அதைப்பத்தித் தாம்பா பேசணும்னு நிற்கறேன், வீட்டிலே கொழந்தையின் முகத்தைப் பார்க்கச் சகிக்கலே. ஊரார் ஏசறதையும் கேக்கப் பொறுக்கலே. பெண்ணைஏன் இன்னும அனுப்பலே — மாப்பிளை ஏன் இன்னமும் வரலேன்னு கேட்டு, கேட்டு, என்னைக் கொத்திவிடறாங்க. கேள்விகேட்க ஆள் இருக்கேதவிர, இரக்கப்பட்டு, இந்தாப்பா கடனாக இந்தத் தொகையை வைச்சிக்கோ, பிறகு கொடுன்னு உபகாரம் செய்கிறவங்க இல்லே.

வா:- ஆமாம்! இதென்ன நீங்க பழையகதையையே பேசறீங்க.

சோ:- நிலைமை, மாறலேயேப்பா.

வா:- அதுக்கு ஏன் மருமகப்பிள்ளையை வரச் சொன்னீங்க. சரிதான், அவன் சொன்னது சரியாகப் போச்சு.

சோ:- எவன்?

வா:- உம்மருமகன் தான்! டே! எங்க மாமனாரு சீர் செய்யறதாச் சொல்லி வரவழைத்து, ஏமாற்றி, எப்படியாவது பெண்ணைத்தலையிலே கட்டிவிடத் தந்திரம் செய்வாரு, ஆகையாலே நீ முதலிலே போயி என்னென்ன சாமான் வாங்கிவைச்சிருக்குன்னு பார்த்துவிட்டு வான்னு, ஓட்டலிலே தங்கிகிட்டு என்னை அனுப்பினான்.

சோ:- உனக்குக் கோடி புண்யம்பா! இந்த ஏழைகிட்ட இரக்கம் காட்டி, எப்படியாவது என்மருமகனுக்கு நல்ல பேச்சுசொல்லி..........

வா:- ஐயயோ! நம்மாலே முடியாதுங்க. அவன், ரொம்பக் கண்டிப்பான பேர்வழி, யார் சொன்னாலும் கேட்கமாட்டான்.

சோ:- என்னைப்பாரப்பா! என் மக கதறுகிறதைப் பார்த்தாத் தெரியும். கொஞ்சம் இரக்கம் காட்டப்பா.

வா:- நான்காட்டி என்னாங்க செய்யறது. அவன்பிடிவாதக்காரன். எப்படியாவது, ஆயிரம் என்பதை ஐந்நூறு, நானூறு, அடெ, ஒரு இருநூறு ரூபாய்க்காவது சீர் செய்து விடுங்க. வேறுவழி இல்லே. எங்கேயாவது கடன் கிடன் வாங்கித்தான் தீரணும்—நான் போய் 'சேதி'யை 'நைசா' சொல்லி, உங்க மாப்பிள்ளையை அழைச்சிகிட்டு வாரேன்—நீங்க, சாயந்திரத்துக்குள்ளே எப்படியாவது சரிப்படுத்துங்க, நான் வரட்டுமா?

சோ:- செய்யப்பா! (வாலிபன் திரும்பிப் போய்விடுகிறான்)

சோ:- படுபாவிப்பய! இவனுக்கும் துளிகூட இரக்கம் இல்லே.

(13-ம் பக்கம் பார்க்க)

### 2-ம் பக்கத் தொடர்ச்சி

பட வேண்டுமென்றும் தீர்மானங்களை நிறைவேற்றினார்கள்.

திருவாங்கூரிலுள்ள சமஸ்தான காங்கிரசில் தமிழர்கள் முக்கிய பங்கெடுத்து உழைத்தார்கள். சமஸ்தான காங்கிரஸில் மெஜாரிட்டியினரான மலையாளிகளுக்குத், தமிழ், தமிழரென்றாலே ஒரு கசப்பு. காரியத்துக்குப் பயன்படுத்திக் கொண்டார்களே தவிர, இவர்கள் கோரிக்கைகள் கேட்கப்படவில்லை. பொறுப்பான ஸ்தானங்களில் ஒரு அங்குலமாவது தமிழனுக்குச்சமஸ்தானக்காங்கிரஸில் கொடுக்கப்படவில்லை. இதனால் சமஸ்தானக் காங்கிரஸில் சேர்ந்து சிறை சென்ற வாலிபர்களில் சிலர் அதை விட்டுப் பிரிந்தார்கள். அவர்களிலொருவர்தான் இன்று திருவாங்கூர் தமிழ் நாடு காங்கிரஸின் தலைவர் தோழர் நத்தானியல் பி. ஏ. பி. எல்.

தோழர் நத்தானியல் தலைமையில் திருவாங்கூர் தமிழ் நாடு காங்கிரஸ் என்ற ஒரு ஸ்தாபனம் நாகர்கோவிலில் சமீபத்தில் ஏற்பட்டது. ஏற்கெனவே நொந்து போன வீரத் தமிழ் வாலிபர்கள் வீறுடன் இந்த ஸ்தாபனத்தில் சேர்ந்தார்கள். தமிழர் நன்மைக்கான தீர்மானங்கள் சட்டசபையில் கொண்டு வரும்போதெல்லாம் மலையாள மெம்பர்கள் அசட்டை செய்வதைக் கண்டித்துக் கூட்டம் போட்டார்கள். மைனாரிட்டிக் கட்சியான தமிழர் கோரிக்கை மலையாளிகளின் எதிர்ப்பால் சட்டசபைகளில் நிறைவேறாமல் போயிற்று. நிலைமை இப்படியிருக்க மலையாளிகளோடு எப்படிக் கூடிவாழ்வது என்று திருவாங்கூர்வாழ் தமிழர்கள் கலந்து பேசினார்கள். "இது நியாயமல்ல, நீதியல்ல, தர்மமல்ல" என்று சமஸ்தான காங்கிரஸ் தலைவருக்கு எழுதினார்கள். அந்த மகாநுபவர் பதில் கூடத் தெரிவிக்கவில்லை. அவ்வளவு அலட்சியம்.

திருவாங்கூர் தமிழ் நாடு காங்கிரஸானது 'இனம் இனத்தோடே' என்ற முறையில் எங்களைத் தனியாகப் பிரித்து வையுங்கள். தமிழர் வாழுமிடங்களையெல்லாம் சேர்த்துத் தமிழ் மாகாணம் ஏற்படுத்திக்கொள்கிறோம் என்று கூறிவந்தார்கள். மொழிவாரியாக மாகாணங்கள் பிரிக்கப்படும்போது தமிழ் நாட்டோடு, திருவாங்கூரில் வாழும் தமிழ் தாலுகாக்களைச் சேர்க்கப்பட வேண்டும் என்றும் திருவாங்கூர் தமிழ் நாடு காங்கிரஸ் கூறுகிறது. இதோடு திருவாங்கூரில் பொறுப்பாட்சி ஏற்படுத்துவதற்கான போராட்டத்திலும் நேரடியாகக் கலந்து பாடுபட்டு வருகிறது.

சமஸ்தான காங்கிரஸ் இதை அடியோடு மறுப்பதோடு, தமிழர் வாழும் இடங்களையும் சேர்த்து ஐக்ய கேரளம் அமைக்கவேண்டுமென்று ஆர்ப்பாட்டம் செய்து வருகிறது. இது நியாயமாவென்று யோசித்துப் பாருங்கள். திருவாங்கூருக்கு விஜயம் செய்த ஆச்சாரிய கிருபலானி முதலிய வடநாட்டுத் தலைவர்களிடம் திருவாங்கூர்த் தமிழர்கள் பொறுப்பாட்சிக்குப் பகைவர்கள், சுயநலக்காரர்களென்றெல்லாம் புளுகி வைத்து அவர்கள் வாயிலாக ஏதேதோ சொல்லவைக்கிறார்கள். இந்த ஏமாற்று வித்தைகளெல்லாம் ஒவ்வொன்றாக அம்பலத்துக்கு வரத் தொடங்கிவிட்டன. திருவாங்கூர் தமிழர்கள் பெருவாரியாகத் திரண்டுவிட்டார்கள். இது சம்பந்தமான நேரடிப் போராட்டத்தில் இறங்கத் தயாராய்விட்டார்கள். கட்சி பேதமின்றி எல்லாத் தமிழர்களும் திருவாங்கூர் தமிழ் நாடு காங்கிரஸில் சேர்ந்துழைக்க வேண்டுமென்று உறுதி செய்துவிட்டனர். சென்னையிலுள்ள திருவாங்கூர் தமிழர்கள் ஒன்று கூடி உதவி செய்ய முன் வந்துவிட்டார்கள். தமிழர்களின் நியாயமான கோரிக்கைகளை நிறைவேற்றுவதற்கு, அவர்கள் எங்கு வாழ்ந்தாலும் சரியே, எல்லாத் தமிழர்களும் உதவிசெய்ய வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

### 12-ம் பக்கத் தொடர்ச்சி

தனக்கோர் கூலிப்படையைக்கிளப்பிவிடவே ஆகஸ்ட்டு 31ல் லண்டனில், அவர்கள் கொக்கரித்தனர்.

"வந்தாலைய்யா மீண்டும்!" என்றனர் ரோஷமுள்ள பிரிட்டிஷ் மக்கள்.

பேசாதே! கீழே இறங்கு—என்று அந்தப் படையைக் கேலி செய்து, கூட்டத்தைக் கலைத்தனர். போலீசும், குறுக்கிட்டு, இந்த மாஸ்லி கூட்டத்தினரை விரட்டிற்று.

பாசிசத்தின் போக்கு இதுதான்—விரட்டப்பட்டாலும் கூட, எப்போது சமயம் கிடைக்கும் நுழைய என்று காத்துக்கொண்டிருக்கும். படை வரிசையிலே பிளவு தானாக ஏற்பட்டாலும், யாராலாவது ஏற்படுத்தப்பட்டாலும், பாசிசம் நுழைந்துகொள்ளும். ஆதிக்க ஆசை அவர்களைப் பிடித்தாட்டும்போது அவர்கள், "நாம் முன்பு விரட்டப்பட்டவர்களாயிற்றே! நம்மைத்தான் மக்கள் மதிக்க மறுத்தனரே! எப்படி மீண்டும் அவர்கள் முகத்திலே விழிப்பது" என்று யோசிக்கக்கூட மாட்டார்கள். காரியம் பெரிது, இந்த ரோஷமான உணர்ச்சி அல்ல, என்று எண்ணுவர். ஆனால் ஜனநாயக உணர்ச்சியுள்ள, பிரிட்டிஷ் மக்கள், இந்தச்சூழ்ச்சியைத்தெரிந்து கொண்டு மதிப்பிழந்த மாஸ்லி கூட்டத்துக்கு மீண்டும் மேடையில் இடந்தர முடியாது என்று கூறிவிட்டனர். அங்கு ஜனநாயகம் வளமாக இருப்பதற்கு அதுதான் காரணம்.

### 7-ம் பக்கத் தொடர்ச்சி

ஆளாகும்படியாக ஆகிவிட்டது. பொதுஜன பாது காப்புச் சட்டம் என்பதுங் கூட மத்திய அரசாங்கத்தாரின் தூண்டுகோலினால் ஆக்கப்பட்டதேயாம்.

திராவிடஸ்தான் உரிமைக்காகப் போராடுபவர்களை அடக்கு முறைக்கு ஆளாக்க அரசாங்கம் முனைந்து ஆவன செய்யு மென்றால், பழுத்து முதிர்ந்து நிற்கும் நான் அந்தப் போராட்டத்தில் முதல்வனாக நிற்பேன். சுதந்திர திராவிடஸ்தான் பெற்றே தீருவோமெனப் போராடுவேன்.

தெலுங்கரும், தமிழரும் சுயமரியாதை வாழ்வு பெற்று வாழ வேண்டும். மொழிவாரி மாகாணங்கள் அமைந்தாலும் அவர்கள் யாவரும் ஒரே திராவிட இனத்தைச் சேர்ந்தவர்கள்தான் என்பதை மறந்து விடக்கூடாது. கன்னடமும், களி தெலுங்கும், கவின் மலையாளமும் தமிழ்த்தாயின் குழந்தைகளே. ஆதலால், மொழிவாரி மாகாணங்கள் பிரிக்கப்பட்டாலும், நால்வரும் ஒரு கூட்டு அமைப்பிலே வாழ்வதுதான் சாலச் சிறந்தது, அப்பொழுதுதான் வடநாட்டு ஆக்ரமிப்பைப் புறமுதுகிடச் செய்ய இயலும் என்று குறிப்பிட்டதோடு, தென்னாட்டுக் காங்கிரசினர் யாவரும் அவர்தம் இன நலனுக்கு உழைக்க எழுந்து வாரீர் என்று அறை கூவி அழைத்தார்.

# திராவிடநாடு
# பிரிவினை மாநில மாநாடு
## "இன்பத்திராவிடமே எமது இலட்சியம்"
## தலைவர்கள் முழக்கம்

'திராவிட நாடு' பிரிவினை மாநில மாநாடு இம்மாதம் 14-ம் தேதி கடலூரில் தோழர் S. முத்தையா அவர்கள் தலைமையில் சிறப்பாக நடைபெற்றது. மாகாணத்தின் பல வேறுபகுதிகளிலிருந்தும் ஏராளமான இனவுணர்ச்சி கொண்ட தோழர்கள் வந்திருந்தனர். காலை 8-30 மணிக்குக் கடலூர் புகைவண்டி நிலையத்திலிருந்து ஊர்வலம் கிளம்பி, 'திராவிட நாடு திராவிடர்க்கே', 'பெரியார் வாழ்க' என்ற பேரொலிகள் முழங்க, மாநாட்டுத் தலைவர்களையும், பெரியார் அவர்களையும் அழைத்துக் கொண்டு காலை 10-30 மணியளவிற்கு அழகுற அமைந்திருந்த 'அருச்சுனன் பந்தல்' வந்தடைந்தது. சென்னையிலிருந்து அழைக்கப்பட்டிருந்த தோழியர் இந்திராணி பாலசுப்பிரமணியம் அவர்கள் சிகப்பு வட்டம் நடுவே அமைந்த கருங்கொடியை அரிய சொற்பொழிவாற்றி ஏற்றிவைத்தார்கள். வரவேற்புக்கழகத் தலைவர் தோழர் வி. கே. எஸ். சண்முகசுந்தரம் அவர்கள் மாநாட்டிற்கு வந்திருந்த தலைவர்களையும், பிரதிநிதிகளையும், பார்வையாளரையும் வரவேற்று நட்புரை நிகழ்த்தினார். பின், டாக்டர் எ. கிருஷ்ணசாமி எம். எ., பி. எச்டி., பார்-அட்-லா அவர்கள் தமக்கென்றமைந்த அருமையான நடையில், ஆங்கிலத்தில் சொற்பொழிவாற்றினார். வரவேற்புக்கழகத்தலைவர் முன்மொழிய, பலதோழர்கள் வழிமொழிய முன்னாள் அமைச்சர் தோழர் எஸ். முத்தையா பி. எ., பி. எல்., அவர்கள் தலைமையேற்று ஆராய்ச்சி மிக்கஅரிய தலைமையுரை ஆற்றினார். பின், பெரியார் ஈ. வே. இராமசாமி அவர்கள் 'திராவிட நாடு பிரிவினையும், எதிர்காலத் திட்டமும்' என்ற தலைப்பில் சொற்பொழிவாற்றினார். இத்துடன் இடைவேளை சாப்பாட்டிற்கு மாநாடு கலைந்தது.

பிற்பகல் 3-30 மணிக்கு மீண்டும் மாநாடு கூடிற்று. 'சண்டே அப்சர்வர்' ஆசிரியர் தோழர் பி. பாலசுப்ரமணியம் அவர்கள் 'திராவிட நாட்டுப்' படத்தை ஆங்கிலத்தில் சொற்பொழிவாற்றித் திறந்துவைத்தார். தோழர் டி. எ. வி. நாதன் அவர்கள் பன்னீர்ச்செல்வம் படத்தைச் சொற்பொழிவாற்றித் திறந்து வைத்தார் தமிழ்ப்பெரியார் திரு. வி. கலியாணசுந்தரனார் தமது பழைய நண்பரான பெரியார் அவர்கள் படத்தை நீண்ட நேரம் சொற்பொழிவாற்றித் திறந்து வைத்தார். பட்டுக்கோட்டைத் தோழர் கே. வி. அழகர்சாமி அவர்கள் 'தாலமுத்து-நடராசன்' படத்தை வீரவுரையாற்றித் திறந்து வைத்தார். பிறகு பல முக்கிய தீர்மானங்கள் தலைவராலும், மற்றும் பல தோழர்களாலும் கொண்டுவரப்பட்டு நிறைவேற்றப்பட்டன. தலைவர் முடிவுரை கூறினவுடன் நன்றி கூறப்பட்டு மாநாடு இரவு 9-மணிக்கு இனிது கலைந்தது.

கொடியேற்றிவைத்த தோழியர் இந்திராணி பாலசுப்ரமணியம் அவர்கள், கொடியில் தோய்ந்திருக்கும் கறுப்பு, சிகப்பு நிறங்கள் எதைக் குறித்து இலங்குகின்றன என்பதை விளக்கிக் கூறி, திராவிடர்கள் அரசியல், பொருளியல், சமுகவியல் ஆகியவற்றில் தாழ்ந்திருக்கும் காரணங்களை எடுத்துக்காட்டி, மறப்பாலும், பிறப்பாலும் மதிப்பிழந்த திராவிடருக்கு, பிறப்புரிமை திராவிடஸ்தான் என்று ஒரு மொழியைக் கொடுத்துதவிய காலஞ்சென்ற தோழர் பன்னீர்ச் செல்வத்துக்கும், நமது முடிசூடா மன்னராகிய பெரியார் இராமசாமியவர்கட்கும் நாம் என்றும் நன்றி செலுத்தக் கடமைப் பட்டிருக்கின்றோம் என்றுகூறினார்கள். மேலும் அவர்கள், திராவிடஸ்தானில் அரசியல் ஆட்சி, பிரிட்டிஷ் ஜனநாயக ஆட்சிபோல் இருக்காது. காங்கிரஸ் ஜனநாயக ஆட்சி என்று சொல்லப்படும், முதலாளி-வருணாஸ்ரம ஆட்சியாகவும் இருக்காது. ஆனால் பொதுமக்களின் ஆட்சியாகத்தானிருக்கும். பாட்டாளி மக்களின் ஆட்சியாகத் தானிருக்கும். முதாளித்வம் வருணாஸ்ரமம் என்ற ஜாதி வேற்றுமை, பெண்ணடிமை எல்லாம் தூள் தூளாக நொருககப்படும். மனிதர் சுதந்திரமாய் வாழ்வார்கள். எல்லோரும் சமமாக உண்டு, உடுத்தி, குடியிருக்க வசதிகள் ஏற்படும் என்றும் கூறினார்கள். 'பெரியார் வாழ்க! திராவிடம் வாழ்க! திராவிட நாடு திராவிடருக்கே' என்ற முழக்கத்துடன் தன் கடமையைச் செய்து முடித்தார்கள்.

வரவேற்புக் கழகத் தலைவர் தோழர் வி. கே. எஸ். சண்முகசுந்தரம் அவர்கள், பேரன்புமிக்க பெரியார் அவர்களே! மாநாட்டுப் பிரதிநிதிகளே! தாய்மார்களே! தோழர்களே! என்று விளித்து, வணக்கஞ் செலுத்தி, வரவேற்புக்கூறி, மாநாடு கூட்டப்பட்டதன் நோக்கத்தை விளக்கினார். அவர் கூறியதின்சாரம்: திராவிட நாடு நம் நாடு. நல்ல வளமுள்ள நாடு. தன்னாட்சிக்கு ஏற்ற நாடு. திராவிடர்களும் நாடாண்டவர்கள். அரச பரம்பரையினர். கற்றறிந்து பல துறைகளிலும் பண்பட்ட நிலையினராய் வாழ்ந்தவர்கள். இவர்கள் இனியும், ஆங்கிலேயரிடமிருந்து விடுதலையடைந்த பின்பும், மாற்றான் தலைமையின் கீழ் அடிமைக் கடிமையாய்த், தற்குறிகளாய்ச், சூத்திரராய், பறையர் பள்ளர்களாய், பிறநாடு சென்று வயிறு வளர்க்க உழைக்கும் கூலிகளாய் இருக்கத் தான் வேண்டுமா? இதற்கு விமோசனம் கிடையாதா? இன அரசுக்குப் போர் தொடுக்கவேண்டும். இறுதிப் போர் நடத்தவேண்டும். அதற்கான

திட்டம் வகுக்கவே இன்று நாம் இங்கு கூடியுள்ளோம்! என்பதாகும்.

மாநாட்டைத் திறந்து வைத்த டாக்டர் ஏ. கிருஷ்ணசாமி அவர்கள் சொற்பொழிவாற்றும்போது குறிப்பிட்டதாவது:—

திராவிடர் கழகத் தலைவர் வெளியிட்ட மாகாண அரசியலமைப்பு அறிக்கையைப் பாராட்டுகிறேன். திராவிட நாடு அமைக்கப்பட்டால் அங்கே ஏழ்மையும், எளிமையும் தாண்டவமாடாது. ஆந்திரா தனித்திருக்க வேண்டுமென்பதற்குத் தடையிருக்காது. தென்னாடு வடநாட்டைப்போல வகுப்பு வெறிக்கு இரையாகவில்லை யென்றால் அதற்குத் திராவிடத் தலைவர்கள் செய்த பிரகாரமே காரணமாகும். நாட்டின் பாதையைச் செம்மையாக அமைக்க மக்களும் குறிப்பாக மாணவர்களும் முயலவேண்டும். இந்த நெருக்கடியான நேரத்தில் இதற்கு நாடு முழுதும் கிளர்ச்சி செய்யப்படவேண்டும் என்று வேண்டிக்கொண்டார்.

மாநாட்டிற்குத் தலைமை வகித்த முன்னாள் அமைச்சர் தோழர் எஸ். முத்தையா அவர்கள்ஆற்றிய தலைமையுரையின் சாரம்:- மூன்றுமாதங்களுக்கு முன் திருச்சியில் கூடிய இதைப் போன்ற பிரிவினை மாநாட்டிற்கு நான் தலைமை வகித்தேன். அது ஜூன் 15ல். திராவிடஸ்தான் பிரிவினையைக் கோரி, அதைப் பெற விரும்பி இன்றுகூட்டப்பட்டிருக்கும் இம்மாகாண மாநாட்டிலும் என்னையே தலைமை வகிக்க கேட்டுக்கொண்டதற்குப் பெருமையடைகிறேன்.

நம்மதிப்பிற்குரிய தலைவர் பெரியார் ஈ. வே. இராமசாமி அவர்கள் தலைமையேற்று, உயிர் நாடியாயிருந்து வேலைசெய்துவரும் திராவிடர் கழகத்திற்குத், திராவிட நாட்டின் பிரிவினையையே அதன்முக்கிய இலட்சியமாக அமைத்துவிட்டார். அதற்கு-நாடெங்கும் பெருத்த ஆதரவு கிடைத்துவிட்ட தென்பதோடு, அதன் கொள்கையும் நன்கு பரவிப், பொது மக்களுடையவும், இதர அரசியல் ன்தாபனங்களைச் சேர்ந்தவர்களுடையவும் ஒருமித்த ஆமோதிப்பைப் பெற்றுவிட்டது மகிழ்ச்சிக்குரிய தொன்றாகும்.

சுயமரியாதைக்கு மதிப்புக்கொடுத்துமானத்தோடு வாழவழிகோலிய திராவிடர்களாகிய நீங்கள், பிச்சையேற்பதைக் காட்டிலும் அழிந்துபடுவதேமேலென்றகொள்கை படைத்த நீங்கள்,பிறர் அளக்குப்படியையேற்றுக்கொள்ளச் சம்மதிப்பீர்களாயின், திருப்தியடையுங்கள். இல்லையெனில், வீறிட்டெழுந்து, சென்னை மாகாணம் சுயேச்சை பெற்றே தீரவேண்டும் என வலியுறுத்துங்கள். நீங்கள் என்ன செய்வீர்களென்பது எனக்குத் தெரியும். சுதந்திர திராவிடஸ்தான் இலட்சியம் எய்தப் பெறுவது உங்கள் கையில் தானுள்ளதென உறுதியாக நம்புகிறேன்.

சென்னைமாகாணத்தைப்பிரிட்டிஷ்காரர் மட்டுமன்றி வட இந்தியரும் ஆதிக்கப்படுத்திச் சுரண்டித்தான் வந்தனர் என்று திருச்சினாப்பள்ளி மாநாட்டு உரையில் நான் தெளிவுபடுத்தியுள்ளேன். வட இந்திய முதலாளிஒருவரானதோழர்கைத்தானின் முக்கியமான கூற்று ஒன்றைமட்டும் எடுத்துக் காட்ட ஆசைப்படுகிறேன் "வட இந்தியமாகாணங்கள் இப்பொழுது பஞ்சத்தால் பீடிக்கப்படும் நிலையிலுள்ளன; இந்தியாவின் இதர பகுதிகளைக் காட்டிலும் அவற்றின் தேவைகளே இப்பொழுது அதிகப்படியாக இருக்கும். ஒவ்வொரு மாகாணத்தினுடைய தேவைகளை அவ்வப்போது நிர்ணயிக்க மத்திய நிர்வாகத்திற்குச் சிலஅதிகப்படி அதிகாரங்கள் வழங்காவிடில், அதனால் வட இந்தியாவை எப்படிக் காப்பாற்ற இயலும்?" என்று அவர் அரசியலமைப்புச் சபைக் கூட்டத்தில் குறிப்பிட்டாராம். இதைவிட இன்னும் என்னவேண்டும்?.

சென்னைக்கு வரும் அகதிகளுள் ஒருபகுதியினர் பிரபலவர்த்தக முதலாளிகளென்றும், தங்கள் வியாபாரத்தை இங்கு துவக்கிக் கொண்டு நடத்தவே இடம் பார்த்து வருகின்றனரென்று தெரிகிறதென்றும் 'மெயில்' பத்திரிகை செப்டம்பர் 2-ம் தேதியன்று கூறுகிறது. சரி, இது தென்னாட்டின் மீது வடநாட்டின் படையெடுப்பல்லவா? இதை நான் மூன்று மாதங்களுக்கு முன்னரேயே, திருச்சினாப்பள்ளி மாநாட்டில் எடுத்து மொழிந்தேனே!

பிளவுபட்ட மிச்ச இந்தியாவிலிருந்து சென்னை மாகாணத்தைப் பிரித்துக் கொள்வது தான் திராவிடஸ்தான் 'என்பதின் சுருக்கமான அர்த்தமாகும். அது ஒன்றுபட்ட நாடாகவும் இருக்கலாம், அல்லது நமது ஆந்திர, கேரள, கன்னடிய சகோதரர்கள் தனித்தனி மாகாணம் வைத்துக்கொள்ள விழைவாராயின், நான்கு மாகாணங்களாகவும் பிரிந்து, அப்படிப் பிரிந்த மாகாணங்களை ஒருபெடரேஷனாகவும் நிறுவிக்கொள்ளலாம். இதன் முக்கிய நோக்கம் என்னவென்றால் வட நாட்டு ஆதிக்கத்தினின்றும் விடுதலைபெறுவதாகும். தனக்கு இது புரியவில்லையென்று யாரும்கூற முன் வருவாரேயாகில், அதனைப் புரிந்துகொள்ள அவர் விரும்பவில்லை யென்றே நான் சொல்வேன்.

நான் இறுதியாகச் சொல்ல விழைவது இதுதான்:- எல்லாத் திராவிடரும்—சென்னை மாகாணவாசிகளனைவரும், அவர்கள் எங்கு வாழ்ந்தாலும் சரி, சுதந்தரத் தென்னிந்தியா இலட்சியத்தத எய்தப்பெற ஒன்றுபடவேண்டும். இதைத் தவிர வேறு எதுவும் நமக்கு அரசியல், பொருளாதார, சமூகவிடுதலை அளிக்காது. இதில் என்னோடு மாறுபடுபவர் ஒருவரும் இருக்கமாட்டார்களென்றே நம்புகிறேன். இவ்விஷயங்களில் ஈடுபடுவதால் சிலருக்குத் தொல்லைகளிருக்கலாம். அத்தகையோர் எங்களுக்குத் தடையாகவாவது இருக்கக்கூடாதெனக் கேட்டுக்கொள்கிறேன்; எங்களை வாழ்த்து மாறும் வேண்டிக்கொள்கிறேன்.

ஒன்றுபடுங்கள்; இலட்சியம் எய்தப் பெறும் வரையிலும் சளையாது உழையுங்கள்; நமது ஒன்றுபட்ட முயற்சி வெற்றியே யளிக்குமென உறுதியாக நம்புகிறேன்!

திராவிடக்கழகத் தலைவர் பெரியார் ஈ. வே. ரா. அவர்கள் படத்தைத் திறந்துவைத்துப் பேசுகையில் திரு. வி. கல்யாண சுந்தரனார் அவர்கள், நாம்ஈண்டுநெருக்கடியும் சோதனையும் மிகுந்துள்ள நேரத்தில் குழுமியுள்ளோம். இந்தநெருக்கடி நமக்கு மட்டுமல்ல, காங்கிரஸ் அன்பர்களுக்கும்தான் ஏற்பட்டுள்ளது. எனக் குறிப்பிட்டார்.

திரு. வி. க. தொடர்ந்து பேசுகையில் குறிப்பிட்டதாவது; காங்கிரஸ் கட்சி சிறிது காலமாகப் பாசிஸ இயக்கமாக உருப்பெற்று வருகிறது. எங்ஙனமெனில் என்னைப் போன்ற பழுத்த தேசீய வாதிகள் கூட அரசியலாரின் ரௌலட் சட்டத்தைவிடக் கொடுங்கோன்மை மிக்க பாதுகாப்புச் சட்டங்கள் என்பவைகளுக்கு

(5-ம் பக்கம் பார்க்க)

# திராவிட நாடு

காஞ்சி] 21—9—47 [ஞாயிறு

## கேடு, செய்யாதீர்

அறுபதுமைல் நீளமுள்ள, அகதிகள் கூட்டம், ஆணும் பெண்ணும், கிழமும் குழந்தையும்; கூனும் குருடும்; பராரியும் வியாபாரியும்; நடந்தும், வண்டியிலும்; மோட்டாரிலும் விமானத்திலும்; ஆயுதங்களுடனும் அச்சத்தைச் சுமந்து கொண்டும்; இவ்விதமான, மனதை உருக்கும் கோரமான ஓர்பயணம்!

கிழக்கிலிருந்து மேற்கே! மேற்கிலிருந்து கிழக்கே!

புயலிலிருந்து அமைதிக்கு-வெறியிலிருந்து வாழ்வுக்கு! வெட்டுக்குத் துகளிலிருந்து, நிம்மதிக்கு, இலட்சக்கணக்கானவர்கள், சென்றனர்—சென்றவண்ணம் உள்ளனர். அகதிகள்! இந்த வார்த்தையிலே புதைந்துள்ள, காட்டு மிராண்டித்தனத்தை எண்ணிப்பார்க்கப் பார்க்க, மனிதப் பண்பை மதிக்கும் எவருடைய மனமும் நோகும். பெரும்போர் நேரிட்டு நாடு அடியோடு தோற்று, நாசம் நர்த்தனமாடி, எதிரியின் இருப்புச் செருப்படியிலே நாடு சிக்கும்போது, நாடல்ல இது இனி—நாம் வாழஇது அல்ல இனி இடம், என்று கதறிப் பதறி, கைக்குழந்தையை வாரி எடுத்து மார்போடணைத்துக் கொண்டு தாய் ஓடுவாள், பாலகன் எங்கே என்று பதறிக் கேட்டு ஓர் அன்னை அழுவாள், மகனே! வாடா! என்றோர் தந்தை அழைப்பான்; வீடிழந்தோம் வாசலிழந்தோம்; பஞ்சையானோம் பராரியானோம் என்றுகூறி அழுதுகொண்டு, கிளம்புவர் மக்கள் கூட்டம் கூட்டமாக. அகதிகள்—என்பது இவர்கட்கேபொருந்தும்.

அறுபதுமைல் அளவுள்ள அகதிக் கூட்டத்தை, வெள்ளை ஏகாதிபத்யத்தை விலகும்படிச்செய்த வெற்றிக்குப்பிறகு, தலைவர்கள் காண நேரிடுகிறது. போர் இல்லை—ஆனால் அகதிகள்! ஏகாதிபத்யம் ஒழிந்தது, ஆனால் புதிய வேதனை பிறந்தது. போரிலே சிக்கிய ஐரோப்பாவிலே கூட நேரிடாத கொடுமை—இந்த அகதிகள் பிரச்னை; இங்கு!

இரு அரசுகளுக்கும் இன்று,இந்த அகதிகளைக் காப்பது எங்ஙனம், ஆ... கூறுவது எப்படி, என்பதே வே... விட்டது.

பே... மேலும் பிரச்னை சிக்கலாகா...படியும், விஷம் பரவாதபடியும் பார்த்துக் கொள்ளும், பெரியதோர் பொறுப்பு, இருஅரசுகளையும் தாக்குகிறது. அந்த அரசுகளை நடத்தும் இடத்திலுள்ளவர்கள் பால், நாம் உண்மையாகவே பரிதாபப்படுகிறோம்.

நிலைமையே நெஞ்சை நோகவைக்கக் கூடியது என்றால், அதை யொட்டி உலவவிடப்படும் வதந்திகளும், வம்பளப்புகளும், மனதை மேலும் குழப்பக்கூடியதாக உள்ளன. இந்தத்துணைக்கண்டத்தின் வரலாற்றிலேயே இதுவரை என்றுமே நேரிட்டிராததோர், பயங்கரமான நெருக்கடி இது, என்ற பொறுப்புணர்ச்சியுடன் பல பத்திரிகைகள் இல்லை! பிணநாற்றத்தையும், தத்தம் கட்சி ஆக்கத்துக்குப் பயன்படுத்திக் கொள்ள வேண்டும் என்று எண்ணுமளவுக்குக் காட்டு மனப்போக்குடன் நடந்து கொள்கின்றன.

யார் குற்றவாளிகள்? — இந்த ஆராய்ச்சி, அகதிகள் பிரச்னைக்கு மருந்தல்ல. மேலும் அகதிகளை வளர்க்கும்வழி அது. பெருநெருப்பை அணைக்கும் பணியே, முக்கியம்—பொறி எங்கிருந்து பறந்துவந்தது என்று கண்டறிவதல்ல. புலம்பிக் கிடக்கும் மக்களின் காட்சியை, உலகம் காணுகிறது—என்ன எண்ணும் இப்போது உரிமை கேட்டுப் பெற்ற அரசுகளைப் பற்றி.

வெளி ஏறினோம் — வேட்டிக் கொண்டு மடிகிறார்கள்.

சுயாட்சி தந்துவிட்டோம்—சூறு வளி அடிக்கிறது.

நாடாள விட்டோம் -நாடு காடாகிறது.

இவ்வாறல்லவா, வெள்ளையர் பேசுவர்.

எங்கெங்கு புதிய தொழிலைத் துவக்கலாம், என்னென்ன புதிய திட்டம் தீட்டலாம், எவ்விதம் பணியாற்றி நாட்டு வளத்தைப் பெருக்கலாம் என்று தலைவர்கள் யோசிக்க வேண்டிய நேரத்தில், லாகூரில் கலகம் வருக! கராச்சியில் கலகம் வருக! பெஷாவரில் பீதி, புறப்படுக! டில்லியில் படுகொலை, உடனேவருக!— என்று தந்திகள் குவிய, விமானமேறித் தலைவர்கள் வட்டமிட்டு, இரத்தக்காட்டைக் காணுவதாக இருக்க நேரிடுவதா! இதற்கோ சுயாட்சி பயன்பட்டது! இவ்வளவுதானா, இந்தத் துணைக்கண்டத்தினரின் பண்பாடு, என்பதை எண்ணும் போதே, வெட்கமும் துக்கமும் சேர்ந்து தாக்கும்.

குற்றம், மக்கள்மீது என்று நாம் கூறமாட்டோம். மக்கள், மகான்களல்ல! அவர்கள் மனதிலே, கோபதாப உணர்ச்சியோ, பழிவாங்கும் எண்ணமோ அறவே ஏற்படாதபடி அருள் மொழி பேசுவதன் மூலம் செய்யமுடியும் என்று நாம் நம்பவில்லை. உபதேசம் வேறு, உணர்ச்சியின் வேகம் வேறு. மனிதனுக்குள் ...ங்கிக் கொண்டிருக்கும் மிருகம், ஒரு ... சத்தம் கேட்டால் விழித்துக் கொள்கிறது, மிகச் சாமான்ய காரணத்தாலும், சீற்றம் கொண்டு பாய்கிறது. எனவே, மக்களுக்கு நல்வழி கூறிமட்டுமே, இந்த நாசத்தைத் தடுக்கவேண்டுமென்று நாடாள்வோர் கருதிப்பயனில்லை. சூழ்நிலையை மாற்றி அமைக்க வேண்டும்.

நாம் கூறுகிறோம், தலைவர்களின் போக்கே, இன்று தலை உருளும் நிலைமை ஏற்பட்டதற்குக் காரணம் என்று. கடைசி விநாடி வரையிலே, முஸ்லீம்கள் மனதிலே பாகிஸ்தான் கிடைக்காது என்ற திகைப்பையும் பாகிஸ்தான் தரக்கூடாது என்றபிடிவாத எண்ணத்தை இந்துக்கள் மனதிலேயும், தங்கி பொங்கும்படி செய்தது முதல்தவறு.

அகதிகளைப் பண்டிதநேரு கண்ட போது அவரை யாரென்றுஅறியாத ஒரு மூதாட்டி, "என்ன நியாயமய்யா இது? ஏனய்யா எங்களை இவ்வித அவதியில்சிக்கவைத்தீர். பாகிஸ்தானை ஏற்படுத்துவது என்று எப்போது தீர்மானித்தீர்களோ, அப்போதே, எங்களைப் பாதுகாப்பான இடங்களுக்கு அனுப்பும் திட்டத்தையும் தயாரித்திருந்தால், இந்த, நிலைமை ஏற்பட்டிருக்குமா?" என்று கேட்டார்களாம். நொந்த உள்ளத்திலிருந்து பிறந்த அந்தக் கேள்வி, நியாயம் நிரம்பியது. காட்சியைக் கண்டே கண்கலங்கியிருந்த பண்டிதருக்கு, மூதாட்டியின் பேச்சுக்கேட்டதால், கண்ணீரே கசிந்திருக்கக் கூடும்.

பாகிஸ்தானைக் கடைசிவிநாடிவரை

எதிர்த்து வந்ததன் பலனுகவே, இரு இனத்திடையேயும் துவேஷ வெறி, கட்டுக்கடங்காத நிலைக்கு வந்தது.

ஈராண்டுகளுக்கு முன்பே தலைவர்கள் தமக்குள் ஓர் சமரசத்துக்கு வந்திருப்பின், பாகிஸ்தான் ஏற்படுத்தியிருப்பின், இந்தப் பயங்கர நிலைமை ஏற்பட்டிராது.

அல்லது பாகிஸ்தான் 1950ல் நிச்சயமாக ஏற்பட்டுவிடும், என்று தேதி குறிப்பிட்டுவிட்டு, இடைக்காலத்தை, இரு அரசுகள் அமைப்பதிலே ஏற்படக்கூடிய, பல்வேறு பிரச்னைகளை, இரு இனத் தலைவர்களும் கலந்துபேசுவதற்கும், சினேக பாவத்துடன், திட்டங்களை நிறைவேற்றுவதற்குப், பயன்படுத்துவது என்ற ஒப்பந்தம் செய்திருந்தாலாவதுஇந்தக் கண்ருவிக காட்சிகள் ஏற்பட்டிராது.

முஸ்லீம்களின் சார்பிலே நின்று பார்க்கும்போது, பாகிஸ்தான், இரண்டாண்டுக்கு முன்பே பிறந்திருக்க வேண்டும் என்பதும், இந்துக்கள் பக்கம் நின்று பார்க்கும்போது, பாகிஸ்தான் இன்னும் ஓர் ஈராண்டுக்குப் பிறகு ஏற்பட்டிருக்க வேண்டும் என்றும், விஷயமறிந்தவர்கட்குத் தோன்றும்.

பழுக்கக் காய்ச்சிய இரும்பின் மீது பலரகப் பூக்கள் கொண்ட மாலையை வீசி, எடுத்து அணிந்து கொள் என்று கூறுவது போலாயிற்று நிலைமை. மக்கள் மனதிலே ஏற்றப்பட்ட வெறி உணர்ச்சி, குறைய, அடியோடு மறைய, போதுமான அவகாசம் தரப்படவில்லை. எனவேதான், இவ்வளவு அவதி நேரிடக் காண்கிறேம்.

இரு அரசுகளும், தத்தமக்கு உள்ள, ஆயுத பலத்தைக் கண்டு, இந்த அவதியைத் தடுத்துவிட முடியும் என்பதிலே நமக்கு நம்பிக்கை உண்டு. எனினும் இந்த நிலைமை மேற்கொண்டு நீடிக்காமலும், பரவாமலும் இருக்க, தலைவர்களின் பேச்சும், செய்தித் தாட்களும், ஆத்திரம் குறைத்து அறிவைப் பெருக்குவதாக மாறியாக வேண்டும். வாளை வாள்கொண்டு தடுப்போம் என்று பேசிய பட்டேல், மக்களின் தாளைப் பற்றிக்கொண்டு இன்று கேட்கிறுர், இந்தப்பழி வாங்கும் உணர்ச்சியும், பலாத்காரமும் கூடாது, இதை விடுங்கள் என்று. பாகிஸ்தான் கவர்னர் ஜெனரலும், இதுபோலவே, ஆத்திரப்படேல் என்று இஸ்லாமியர்களுக்கு அறிவுரை கூறியிருக்கிறுர். வடநாட்டு மக்களின் மனப்பான்மை, இரு இனத்தவருக்கும் சேர்த்தே கூறுகிறேம், நீறு பூத்த நெருப்பு போன்றது. அந்த இடத்து மனவளம் அங்குள்ள வரலாற்றையும், வாழ்க்கை முறையையும் பொறுத்து இருக்கிற காரணத்தால் எங்கு நோக்கினும், இடிந்த கோட்டை, தூர்ந்த அகழி, அழிந்த நந்தவனம், குலைந்த ஸ்தூபி, இவைகளே அங்கு. யார் மனதிலும், அவன் படை எடுத்த கதை, இவன் அடித்த கொள்ளை, என்ற கதைதான்! இவ்விதமான மனப்போக்கு இருக்கிற காரணத்தாலேதான், எவ்வளவு சாமான்யமான விஷயப் பிரசாரமும், அங்கு கலகத் தீயைச் சுலபத்திலே கிளப்பிவிட முடிகிறது.

திராவிடம், இத்தகைய நிலையிலே இல்லை. இங்கு மக்களுக்குள் உள்ள மனப்பண்பு, உண்மையாகவே, மற்றவர் கண்டு மதிக்கக்கூடிய விதமாக, இந்த ஒரு பிரச்னை சம்பந்தப்பட்டமட்டிலே இருக்கிறது. இந்த மாண்பு கெடும் விதமாக, சொல்லாலோ, செயலாலோ, யார், எதுசெய்ப முற்படினும், அவர்களே, மக்களின் துரோகிகளாவர்.

## பொறுப்பு நமதே!

ஆந்திரர்கள், சென்னை நகர் தங்கட்கு, என்று கேட்கிருர்கள். கேட்கிருர்கள், என்ருல், பாரதியார் கூறியபடி, "சுந்தரத் தெலுங்கினில் பாட்டிசைத்து அல்ல!—பாணு, தடிகளைச் சுழற்றிக் கொண்டு!!

சென்னை மட்டுமா! செங்கற்பட்டு, வடாற்காடு, சீரங்கம்......இப்படி அவர்களுடைய "மானசீக யாத்திரை" மதுரை வரையிலும்கூடச் செல்கிறது. அவர்கள் மீது குற்றமில்லை, தமிழ் நாட்டின்மீதுதான் முழுத்தவறும்—ஏன் இந்த நாடு இவ்வளவு எழிலும் வளமும் பெற்றிருக்க வேண்டும்! வளம் இருக்கவேதான், 'வந்தவர் போனவர்' எல்லாம் இங்கு, வாழ்வு கேட்டுப் பிறகு, ஆதிக்கமும் கேட்கின்றனர். ஆனல், காலம் கொஞ்சம் மாறி இருப்பதை மறந்து ஆந்திர நண்பர்கள் ஆர்ப்பரிக்கின்றனர், மதறுஸ் மனதே! என்று!! தமிழகம், தன் மக்களை, மலாய்த் தோட்டக் காடுகளிலே மார் உடையப் பாடுபட விட்டுவிட்டு, இங்கு, ஆரியரும் ஆந்திரரும், மார்வாடியும் மற்றவரும், மகிழ்ந்து வாழ்ந்திருக்க வைக்கும் காரியத்தை, இனியும் செய்து கொண்டிராது! எனவே, தடி சுழற்றுவதைச் சற்று நிறுத்திவிட்டு நமது ஆந்திர தமக்கு நியாயமாகக் கிடைக் தாரணியைப் பெற்று, சர்வ வாழ. வழி செய்து கொள்வதே; அவர்கள் பெறும், ஆந்திரம், தார, அரசியல், கலைத் துறை அடிமைப் படாமலிருக்க வேண்டு நிச்சயமாக, வடநாட்டுத் தொ அறுத்துக்கொண்டு, தமிழகத்து 'கூட்டு அரசு' கொள்ளும், முறைய 'திராவிட நாடு' திட்டத்தை ஆத வேண்டும். இல்லையேல், பெற்ற ஆந் ரத்தை, பிர்லாவிடம் அடகு வைத்து தான், ஆகவேண்டும். இதனைக் கவனித்து, தமிழகத் தலைவர்களுடன் கலந்து பேசவேண்டிய நேரத்தில், கூவம் ஆறு எமதே! கொள்ளிடமும் எமதே! என்று கூவுவது, அர்த்தமற்ற காரியம், அநாவசியமான, மாச்சரியத்தை வளர்க்கும் செயல். இதைப், பொறுப்புள்ள ஆந்திரத் தலைவர்கள் செய்வது வம்பை விலை கேட்கும் விபரீதமான காரியமாகும்.

ஆந்திர மாகாணம், அமைவதைத் திராவிடர் கழகம், வேண்டாம் என்று, அன்றும் சொன்னதில்லை, இன்றும் சொல்லவில்லை. ஆனல், மொழியையும் அதை ஒட்டி அமையும் வாழ்க்கை முறையையும் கவனிக்கும்போது, தமிழகம், வடவேங்கட முதல் குமரிவரை, என்பதையோ, வேங்கட முதல் வங்கத்தைத் தொடும் இடம்வரை, ஆந்திரம், என்பதையோ, மொழி வழி அரசு வேண்டுமென்று கூறும் எவரும் மறுக்கமாட்டார்கள். திராவிடர் கழகம், மொழிவாரியாக, ஆந்திரம், தமிழகம், கேரளம், கர்ணுடகம் என்று அமைய வேண்டுமென்பதையும், அங்கனம் அமையும் அரசுகள், தமக்குள், ஓர் கூட்டாட்சி முறை ஏற்படுத்திக் கொள்வதன் மூலம், வடநாட்டுச் சுறண்டலிலிருந்து தப்பி, வளத்துடன் வாழவேண்டும் என்பதையுமே, வலியுறுத்தி வருகிறது.

'கூட்டாட்சி' தேவை என்கிற காரணத்தால், ஆந்திரர்கள் அடாது கூறும் மதறுஸ் மனதே போன்ற கூச்சலை, கீதமாகக் கொள்ளவோ, சென்னையை ஆந்திரத்தில் சேர்த்துவிடவோ, திராவிடர் கழகம், ஒருபோதும் இசையாது. கண்ணை விற்றுச் சித்திரம் வாங்கும் கேலிக் கதைபோலாகும், சென்னையை ஆந்திரருக்கும், மற்றும் பல்வேறு இடங்களிலே, பல்வேறு மொழியினருக்கும், கொஞ்சம் கொஞ்சமாகத் 'தானம்' தந்துவிட்டு, தமிழகம் தேய்ந்து, பிறகு, கூட்டாட்சி நடத்த முனையும் காரியம்.

தமிழகம், எது? ஆந்திரம் எது? கேரளம் எது? கர்ணுடகம் எது?—இதனை உருவாக்க, கூடிக் கலந்து பேசுவது முறை.

பேசும்போது, மாச்சரியமற்ற நிலை வேண்டும். இன்று இதனைச் செய்யக் கூடிய நிலை, திராவிடர் கழகத்துக்கே இருக்கிறது.

...க கட்சி என்றால் ஆந்திரர் ...சந்தேகக் கண்கொண்டு பார்ப் ...ந்திர மகா சபை என்றால் ...சந்தேகக் கண்கொண்டு, தமி ...ட்சி பார்ப்பதும், இரு அமைப்பு ..., சந்தேகத்தோடு, மலையாளிகள் ... பார்ப்பதும், மலையாளிகள் மன் ...க் கர்நாடகக் கழகம் முறைப்பதும் ...பு. அதிலும், இன்னும் இரண் ...ரு 'ஆந்திர மாநாடுகள்'—(சென்னை ...நடந்ததுபோல!) நடைபெற்று விட் ...ால், இந்தச் சந்தேகச் சூழ்நிலை அதிகமாகும். எனவே, இந்தக் கழகங்கள், தத்தமக் கென்றுள்ள, திட்டங்கட்கு, ஆதரவு தேடும் அளவுக்குத்தான், பணியாற்ற முடியுமே தவிற, கூட்டாட்சி உணர்ச்சியுடன், கூடிப் பேசி, ஆதார பூர்வமான காரணங்களைக் காட்டி, மொழி வழி மாகாணங்கள் இன்னின்ன முறையிலே அமைவதே நியாயம், என்பதை விளக்கி, ஒருமனப்பட்ட முடிவு ஏற்படச் செய்ய, இவைகளால் முடியாது—அந்தக் கழகங்களின், திறமையைப் பற்றிச் சந்தேகித்து நாம் அவ்விதம் கூறுவதாக எண்ணவேண்டாம். அவைகளின் நிலைமையைப் பற்றிக் கூறுகிறோம். அவை ஒவ்வொன்றும் 'உரிமை முரசு' கொட்ட முடியுமே யொழிய, 'சமரச மார்க்கம்' காணும் கருவியாக முடியாது. இந்தக் காரியத்தைத் திராவிடர் கழகந்தான் மேற்கொள்ள வேண்டும் — திராவிடர் என்ற இனத்தவரே, மொழி வழி நாலு பிரிவினராக உள்ளவர் என்ற கொள்கையும், அதற்கு ஏற்ற திட்டமும் கொண்டிருக்கிற காரணத்தால்.

ஆந்திரர் பிரச்னை போலவே, திராவிடர் கழகம் கவனிக்க வேண்டிய வேறோர் பிரச்னை, திருவிதாங்கூர் தமிழர்கள் விஷயம். அது குறித்து ஒரு விளக்கமான கட்டுரை,வெளியிட்டிருக்கிறோம். இக்கட்டுரை, திருவாங்கூர் தமிழ்நாடு காங்கிரஸ் காரியக்கமிட்டி அங்கத்தினர், தோழர் S. K. சாமி அவர்கள் தீட்டியது. பலத்த போராட்டத்துக்கும் தயாராக உள்ளனர், திருவாங்கூர் தமிழர்கள். அங்கு இது வரையில், பொறுப்பாட்சி பெறும் பெரிய காரியம் இருந்துவந்தது. அது இன்று முடிவுற்றது. எனவே இனி அங்கு, திருவாங்கூர் தமிழர் பிரச்னை பலம் பெற்றே தீரும். இதுபற்றி, திராவிடர் கழகம், திருவாங்கூர் சர்க்கார், திருவாங்கூர் சமஸ்தான காங்கிரஸ் ஆகியவற்றுடன், கலந்து பேசவேண்டும்.

இன அரசு, நாம் கோருகிறோம். அந்த இனம், மொழி வழி, பல பிரிவுகளாக உள்ளன. மொழி வழி பிரிந்திருப்பதனால், அவை ஒன்றுக்கொன்று மோதிக்கொள்ள வேண்டாம், கூட்டு அரசியல் முறையைக் கொள்வோம்,என்ற திட்டம்கொண்டுள்ள, திராவிடர் கழகமே, இந்த நான்குமொழிப் பிரிவினரையும் சந்திக்கச் செய்ய முடியும். நால்வருக்கும், பொது மன்றமாக, ஆலோசனைக் கழகமாக அமையும், வாய்ப்பு, திராவிடர் கழகத்துக்கே உண்டு. திராவிடர் கழகம், இக்காரியத்தைச் செய்யாவிட்டால், தமிழர் கழகம், ஆந்திர மகாசபா, கேரள சமாஜம், கர்நாடகக் கழகம் எனும் நான்கும் தனித்தனியே பணியாற்றுவதும், ஒன்றுக்கொன்று பேதத்தையும் துவேஷத்தையும் வளர்த்துக் கொள்வதுமாகி, இறுதியில், நமது இலட்சியமான திராவிட நாடு திராவிடருக்கே, என்பதற்கே ஊறு நேரிடக் கூடிய சூழ்நிலை ஏற்பட்டுவிடக்கூடும். இந்தக் கழகங்கள், வேலை செய்யாதிருக்குமென்று எதிர்பார்ப்பதும் தவறு. அதுபோலவே, திராவிடத்திலே எந்தப் பகுதியாரிடம் இருந்தாலும் என்ன என்று கவலையற்று இருப்பதும் தவறு. மதறாஸ் மனதே! என்று ஆந்திரர் கூறும்போது, சரி, என்று தமிழர்கள் கூறிவிட முடியாது. நாஞ்சிநாடு எமக்கே என்று திருவாங்கூர் சமஸ்தானம் பிடிவாதம் செய்வதையும் தமிழர்கள் சகிக்க முடியாது. இந்தப் பிரச்னைகளை, நாம், உதாசீனம் செய்யவும் கூடாது, இவை வளருகின்றன. இவற்றுடன் சேர்ந்து, துவேஷம் வளராதிருக்க வேண்டுமானால் திராவிடர் கழகம், பொதுமன்றம் என்ற நிலையில், இந்தப்பிரச்னைகளைத் தீர்த்துவைக்க முன் வர வேண்டும். ஆந்திர மகா சபை, கேரள சமாஜம், தமிழரசுக் கழகம், கர்நாடகக்கழகம்எனும்நான்குஅமைப்புகளையும், பிரதிநிதிகளை, தத்தமதுதிட்டங்களுடன், வரச் செய்து, திராவிடர் கழகம், அந்த திட்டங்கள் பற்றி ஆய்வுரை கூறி, சமரச திட்டம் வகுத்திட வேண்டும். அதற்கு முன்னதாக,—அதாவது, கூட்டு மாநாடு நடத்துவதற்கு முன்னதாக—அந்தந்த கழகங்கள் வெளியிட்டுள்ள திட்டங்களை, திராவிடர் கழகம், பரிசீலனை செய்ய வேண்டும்.

கடலூரில், திராவிட நாடு திராவிடருக்கு என்ற நமது மூலாதாரத் திட்டத்தை மீண்டும் வலியுறுத்தியாகி விட்டது, அதுவே எமது இலட்சியம் என்று, பல திறப்பட்ட திராவிடர் தலைவர்களாலும், ஏற்றுக் கொள்ளப்பட்டு விட்டது.

பெரியார்மட்டுமேஇந்தப்பிரச்னையைப் பேசி வருகிறார், திராவிடத்தின் மற்றத் தலைவர்கள் ஒப்பவில்லையே என்றுஇனிக் கூறுவதற்கில்லை. திராவிடர் கழகம், என்று பெயர் கொள்வதே, சகிக்க முடியாத மாறுதல் என்று எண்ணிய சண்டே அப்சர்வர், ஆசிரியர் முதற் கொண்டு, பலரும், திராவிடநாடு தனி நாடு ஆவதை ஏற்றுக் கொண்டனர். பெரியாரின் இப் பெரும் வெற்றி கண்டு நாம் மகிழ்கிறோம். இனி சந்தேகமற்ற முறையிலே திராவிட நாடு தனிநாடு ஆவதற்கு புதிய பலமும் கிடைத்துவிட்டது என்று கூறலாம். எனவே, இதுதான் தக்க சமயம், நாம் மேலே குறிப்பிட்ட முறையிலே, திராவிடர் கழகம், பொது மன்றமாகி, இன்று தலைவிரித்தாடும் ஆந்திரப் பிரச்னை, திருவாங்கூர் தமிழர் கிளர்ச்சி போன்றவைகளைக் கவனிக்க. ஆங்காங்கு நடைபெறும், இந்த உரிமைக் கிளர்ச்சிகளை நாம் கவனித்து, நமது கருத்துரையைத் தந்து, தகராறுகளைத் தீர்த்தால்தான், ஆங்காங்குள்ளவர்கள், நம் அனைவருக்கும் பொது நலன் தரக் கூடிய திராவிடநாடு திராவிடருக்கே என்ற பிரச்னையைக்கவனிக்கவும், வரவேற்கவும் செய்வார்கள். திராவிடர் கழகத்தின் அதிகார பூர்வமான நோக்கமும் வேலைத் திட்டமும், இது சம்பந்தமாக விரைவில் வெளிவரும் என்று நம்புகிறோம்.

**"மொழிவாரியாக மாகாணங்கள் பிரிக்கப்பட்டாலும், நால்வரும், ஒரு கூட்டு அமைப்பிலே வாழ்வதுதான் சாலச் சிறந்தது. அப்போதுதான், வட நாட்டு ஆக்கிரமிப்பைப் புறமுதுகிடச் செய்ய முடியும்."** என்று, கடலூர் மாநாட்டிலே, திரு. வி. க. கூறினார். அறிவும் அன்பும் கலந்த இந்த உரையை நாம் வரவேற்கிறோம். திராவிட இனத்தவராக இருப்பினும், மொழி காரணமாக வேறு பிரிவினராகியவர்களுக்கெல்லாம், இதனை எடுத்துக் காட்டுகிறோம். இந்த கருத்தையே திராவிடர் கழகம் துவக்க நாள் முதல் கொண்டு வந்துள்ளது. ஆனால், மொழிவாரி மாகாணங்களின் அமைப்புக்கான வேலைகள் துரிதமாக நடைபெறுகின்ற நேரத்திலே, மொழி வாரி மாகாணங்கள் அமைதல் வேண்டும், அமைந்த பிறகும், வட நாட்டுக்கு அவை அடிமையாகாமல், தமக்குள் ஓர் கூட்டு அமைப்பு ஏற்படுத்திக் கொள்ளவேண்டும் என்ற கோட்பாடு கொண்ட நாம், மொழிவாரி மாகாண அமைப்புக்கும் முறை கூறுவதோடு, அந்த அமைப்பின்போது, புகுத்தப்படக் கூடிய அநீதிகளையும் தடுத்தாக வேண்டும். மதறாஸ் மனதே! என்று சீறி ஆந்திரர், இத்தகைய அநீதியைப் புகுத்துவதைத் தடுக்கும் பொறுப்பும், தமிழ் வட்டாரங்களைத் தமிழகத்துடன் சேர்த்து விடும் கடமையை, சுயநலம் காரணமாகச் செய்ய மறுக்கும் திருவாங்கூர் சமஸ்தானத்தின் பிடிவாதம் நிறைந்த அநீதியைத் தடுக்கும் பொறுப்பும், திராவிடர் கழகத்துக்கு இருக்கிறது. எனவே மொழிவாரி மாகாணம் இன்ன முறையில் இருத்தல் வேண்டும், அங்ஙனம் அமையும் அமைப்புகள், சேர திராவிடக் கூட்டாட்சி எனும் அமைப்பை இன்னவிதமாக அமைத்தல் வேண்டும், என்பதை, மொழிவழி பிரிந்திருப்பினும் இனவழியில் ஒன்றாக உள்ள திராவிடர்களுக்குப் பொது மன்றமாக உள்ள திராவிடர் கழகம், திட்டவட்டமாகக் கூறியாக வேண்டிய நாள் வந்து விட்டது. இதற்கு ஆவன செய்ய, திராவிடர் கழகம் தவறாது.

* * *

## அந்தயோசனை வேண்டாம்

பஞ்சாபிலிருந்து சென்னைக்குக் கொண்டுவர இருக்கும் பதினாயிரம்

அகதிகளினால் மாகாணத்தின் அமைதிநிலை பாதிக்கப்படுமாதலால், அந்த விஷயத்தைப் புனராலோசனை செய்யுமாறு சென்னை அரசாங்கத்தைக் கேட்டுக்கொண்டும், அந்த அகதிகளை இம் மாகாணத்திற்கு வெளியில் எந்தப் பகுதியில் பராமரிப்பதாக இருந்தாலும் சென்னை மாகாண அரசாங்கத்தார் மத்திய சர்க்காருக்குப் பத்து லட்சம் ரூபாய் தருவதாகக் கூறிவிடலாம் என்றும், இத்திங்கள் 14-ம் தேதி கடலூரில் நடைபெற்ற திராவிடநாடு பிரிவினை மாநில மாநாட்டில் நிறைவேற்றப் பட்ட தீர்மானம் ஒன்று குறிப்பிடுகிறது. இதே கருத்துள்ள தீர்மானம் சென்னை தொழிற்சங்கத்தாராலும் நிறைவேற்றப்பட்டிருக்கிறது. சென்னை பிரதம மந்திரியுள்ளிட்ட பல காங்கிரஸ் ஊழியர்களிடத்திலேயும் அகதிகளின் சென்னை வருகை அமைதிக்குப் பங்கம் ஏற்படுமளவில் ஆபத்து உண்டாக்குமோ என்று ஐயங்கொண்டு அகதிகளின் வருகைக்கு எதிர்ப்புணர்ச்சி கொண்டிருப்பதாகக் கேள்விப் படுகிறோம். அகதிகளின் வருகையைப் பற்றி நாம் முன்பு குறிப்பிடுகையில் மனிதாபிமானத்தைக் கவனிக்கும்போது அவர்களுக்குச் சென்னை அரசாங்கம் இடமளிப்பது சரியென்ற போதிலும், நிரந்தரமாக இங்கேயே அவர்கள் தங்கும்படி விட்டுவிடக் கூடாதென்றும், வந்து தங்கும் அவர்களை சரியான முறையில் அரசாங்கம் கண்காணித்து வரவேண்டுமென்றும், இல்லையேல் பொதுமக்களோடு அகதிகள் கொள்ளும் தொடர்பினால் வெறுப்புணர்ச்சி மூட்டப்பட்டு அமைதிக்குப் பங்கம் ஏற்படநேரிடும் என்றும் கூறியிருந்தோம். அகதிகளின் குடியேற்றத்தைப் பற்றி மத்திய மாகாண சர்க்கார் நாகபுரியிலிருந்து வெளியிட்டிருக்கும் அறிக்கையொன்றைக் கவனிக்கும் போது, சென்னை அரசாங்கத்தை எச்சரிக்கையாக இருக்கும் படி சொல்ல வேண்டிய பொறுப்பு ஏற்படுகிறது. அவ்வறிக்கையில், கூறப் படுவதாவது:

பஞ்சாபிலிருந்து இம் மாகாணத்திற்கு வந்திருக்கும் அகதிகள் பொதுக்கூட்டங்களில் கோபமூட்டும் வண்ணம் சொற்பொழிகள் நிகழ்த்துவதாகச்சிலசெய்திகள் அரசாங்கத்தின் பார்வைக்கு வந்திருக்கின்றன.

ஆகவே, அந்த அகதிகள் பொதுக் கூட்டங்களில் பேசாதிருக்குமாறு சர்க்கார் கேட்டுக் கொள்வதுடன் அப்படிச் செய்வதன் மூலம் இம் மாகாணத்தின் அமைதிக்கும் தங்கள் சமூகத்தாரின் நன்மைக்கும் உதவுவார்கள் என்று நம்புகிறது. அவதியுற்ற காலத்தில் அடைக்கலமளித்து ஆதரவளித்த சர்க்காரையும் மக்களையும் துன்புறச் செய்வது அவர்களுக்கழகல்ல என்பதாகும்.,—

அத்தகைய நிலைமை அமைதி நின்று நிலவும் சென்னை மாநிலத்தில் ஏற்படாமலிருக்க வேண்டுமானால் அகதிகளைக் குடியேறச் செய்யாமலிருப்பதே மேல் என்று தோன்றுகிறது. பொருள்வசதிமட்டும் வழங்கி அகதிகளை வேறுஎங்கேனும்வடநாட்டிலேயே தங்கும்படி செய்துவிடுவது நல்லதென்று படுவதால் அகதிகளைச் சென்னைக்கு வரவழைக்க வேண்டாமென்று சென்னை அரசாங்கத்தை வற்புறுத்துகிறோம்.

## 'தர்பார்'-இனி முடியாது.

மைசூர் திவான் சர். A. இராமசாமி முதலியார், பொறுப்பாட்சித் திட்டத்தை எழுதிக்கொண்டே இருக்கிறாராம்-விரைவில் வெளியிட. திவான் திட்டம் தீட்டிக்கொண்டிருக்கும் நேரத்தில், அவருடைய சர்க்கார் அதிகாரிகள் சமஸ்தானத் தலைவர்களைச் சிறையில் தள்ளியபடியும், கூட்டங்களைக் கலைத்தபடியும், வேட்டுகளை வீசியபடியும் உள்ளனர். மக்கள் ஏற்றுக்கொள்ளக் கூடிய விதமாக, பொறுப்பாட்சித் திட்டத்தைத் திவான் தீட்டுவது என்று ஏற்பட்டான பிறகு, ஏன், கிளர்ச்சி ஏற்படாதபடி, மக்கள் மன்றத் தலைவர்களுக்குத் திவான், முழுத்திருப்தி ஏற்படும்படி செய்யக்கூடாது? எத்தனை பெரிய அரசாங்கமானாலும், எழுச்சியுற்ற விடுதலைப் போர் உணர்ச்சிகொண்ட மக்களின் கிளர்ச்சியை, இனி அடக்குவதென்பது முடியாத காரியம். வரலாறுகள் எல்லாம், திவானுக்கு, மனப்பாடம்! எனினும், அவர் மன்னராட்சியைத் தாங்கும் பொறுப்பை ஏற்றுக்கொண்டதால், மக்களின் எழுச்சிக்கு எதிரிடையாக இருக்கிறார்! அவர் தம் நிலை கண்டு நாம் பரிதாபப்படுகிறோம்.

வேலை, நிறைய இருக்கும் திராவிடத்தை விட்டுச் சென்றதே தவறு, அதைவிடத் தவறு விடுதலைப்போரை அடக்கும் எதேச்சாதிகார வேலைக்குத் தலை[illegible] குவது. திருவாங்கூரில் பொ[illegible] பாட்சி ஏற்பட்ட உடனே [illegible] மைசூர் பொறுப்பாட்சித் [illegible] டத்தை வெளியிட்டிருக்கவே[illegible] காலங்கடத்துவதும், இடைக்[illegible] திலே, விடுதலைப் போரிடுவோ[illegible] வேதனைக்குள்ளாக்கி, அவர்களின் [illegible] புக்கும்கண்டனத்துக்கும் ஆளாவ[illegible] சரியல்ல. மக்கள் ஏற்றுக்கொள்ள[illegible] கூடிய விதமான பொறுப்பாட்சித் திட்டத்தை திவான், விரைவிலே வெளியிட்டு விடவேண்டுகிறோம். மன்னர்கள் பீடங்களிலே இருக்க அனுமதிக்கப் பட்டிருப்பதே, நாகரிக நாட்களிலே ஒரு கேலிக்கூத்து! பொறுப்பாட்சியும், ஜனநாயக வேகமும், இந்திய துணைக்கண்டத்திலே வேறு இடத்தில் இருக்க, சமஸ்தானங்களிலே மட்டும், 'தர்பார்' நடத்தப்படுவது கண்டால், எப்படி அங்குள்ள மக்கள், சகிக்கமுடியும். உலக வல்லரசுகளிலே ஒன்றான பிரிட்டன், தன் பிடியை விட்டுவிட வேண்டியபடி, உலகச் சூழ்நிலை ஏற்பட்டான பிறகு, நொண்டிக் குதிரையும் நோயாளிப் பட்டாளமும் வைத்துக்கொண்டு, எத்தனைக் காலத்துக்கு இந்த 'ராஜாக்கள்' தமது, தர்பாரை நடத்த முடியும்! பிடியைத் தளர்த்தி, மக்களாட்சிக்கு இடமளித்ததாலேதான், முடியாவது நிலைத்தது, பிரிட்டன் போன்ற நாட்டு மன்னர்களுக்கு. இந்த யூகம் கொண்டால் சில காலமாவது, மன்னர்களாகப் பெயரளவிலாவது இருக்கலாம். பிடியைக் கூடத் தளர்த்த மறுத்தால், பெரும் புயலை எதிர்த்த கலமாகும், மன்னர்கள் நிலை. மைசூருக்கு மட்டுமல்ல, ஹைதராபாத் போன்ற பெரிய சமஸ்தானங்களுக்கும் சேர்த்தே கூறுகிறோம், இது மக்களாட்சிக் காலம் —மன்னர்களின் முன் மண்டியிடும் நாட்களல்ல — விடுதலை வேட்கை வீறு கொண்டு எழும் காலம், மன்னன் தேவகுமாரன் என்று நம்பும் நாட்களல்ல! எனவே சுதேச சமஸ்தானாதிபதிகளும், அவர்களைச் சூழ நிற்கும், திவான்களும், பொறுப்பாட்சியை விளக்கமாகவும், விரைவாகவும், வழங்கவேண்டும். இதனை, மக்கள் கிளர்ச்சி முற்றுமுன்னம், மதிமிக்க மைசூர் திவான் செய்து, நற்பெயர் பெறவேண்டுகிறோம்.

✻

# பெரியார் வாரம்.

**17—9—47 முதல் 24—9—47 வரை தமிழ் நாடெங்கும், பெரியார் வாரம், கொண்டாடப் படுகிறது.**

தன்மான இயக்கத் தந்தை தந்த திராவிட நாடு திராவிடருக்கே என்ற முழக்கம், இன்று தமிழகமெங்கும் கேட்கப்படுகிறது. இன்று ஏற்பட்டுள்ள புது எழுச்சிக்கு, பெரியாரின் பெருந்தொண்டே, காரணம். எனவே அவர்தம், மாண்பினைக் கூறுவதில் மட்டற்ற மகிழ்ச்சி கொள்கின்றனர், மறத்தமிழர். ஓயாது உழைத்து, புத்துயிர் தந்த தலைவருக்கு, ஆயிரமாயிரம் இளைஞர்கள், தமது காணிக்கையைச் செலுத்த முன்வந்துள்ளனர். பெரியாருக்கு வயது 69. அவருடைய பெரும்படையிலே அறுபதனாயிரத்துக்கு மேற்பட்டவர்கள் உளர். அவருடைய போர்முரசு கேட்காத ஊரில்லை, நாளில்லை. இன்பத் திராவிடம் எனும் இணையற்ற இலட்சியத்துக்காக, ஆற்றலுடன் பணி புரியும் பெரியாரின், கட்டளையை எதிர்பார்த்து நிற்கிறது, விழிப்புற்ற திராவிடம். அவருடைய உழைப்பு வீண் போகாது என்பதை விளக்கும் காட்சி என, இன்று காண்கிறோம், நாடெங்கும் ஆர்வமிக்க இளைஞர் கூட்டத்தை.

நாம் விரும்பும் திராவிடத் தனிஅரசு தனைக் காணும், பெரும் வெற்றியைத் தேடித்தரும் பேராற்றல் படைத்த பெரியார், பல்லாண்டு வாழ்ந்து, நமது கனவெலாம் நனவாகும் நிலையை ஏற்படுத்துவார் என்ற நம்பிக்கையுடன், அவருடைய கட்டளையை எதிர்நோக்கி, திராவிடம் தயாராகநிற்கிறது.

வாழ்க பெரியார்! திராவிடநாடு திராவிடருக்கே!

# வந்தார்களய்யா, மீண்டும்!

வெட்கம், மானம், ரோஷமின்றி, விரட்டப்பட்ட, மூக்காடிட்டு ஓடிய, முறியடிக்கப்பட்ட, வீரர்கள் மீண்டும் தோன்றுகின்றனர், மேடையில்!

செல்லாக்காசாகி, செல்வதற்கு இடமின்றி, நினைப்புக்கெட்டு, மனக்கோட்டை தூளாக்கப்பட்டு, மதிப்பற்றுப்போனமாமண்டைகள், மன்றமேறின!

இந்த வெட்கக்கேடான காட்சியைக் கண்ட மக்கள், கைகொட்டிச் சிரித்து, ஏ! எங்கு ஒளிந்து கொண்டிருந்தாய் இந்நாள்வரை? விலாசமே தெரியாமல் இருந்த நிலை மாறிடக் காரணம் என்ன? இன்று வந்த நீர் முன்னம் கதைதனை மறந்தீரோ? மன்னிப்புக் கோரிவந்தீரோ, அல்லது மறந்திருப்பார் பழம் கதையை என்று எண்ணினீரோ! என்று கேலி மொழி பேசாதிருக்க முடியுமா!

மக்கள் பேசினதைவிட அவர்களின் பார்வை, மிகத் தெளிவாகக் காட்டிற்று, 'திரும்பிவந்த' வீரரைப் பற்றி, நாடு என்ன எண்ணுகிறது என்று.

ஆனால் சர். ஆஸ்வால்டு மாஸ்லியின் சகாக்கள் இதனைக் கண்டு சளைக்கவில்லை—ஆசை வெட்கமறியாதல்லவா?

இறுமாப்புடன் இந்த மாஸ்லி, இங்கிலாந்தைத், தானும் தன்னைத் தாங்கி நிற்கும் சிறு கூட்டமும் சேர்ந்து ஆளமுடியும் என்று கருதி, தொலைவிலே இருந்த ஹிட்லர், முசோலினியைத் தொழுது, அவர்களின் பாசிசப் படைக்குத் தானோர் பலம் என்று வீப்பு பேசி, பிரிட்டனிலே உள்ளகன்சர்வேடிவ், லிபரல், லேபர், எனும் எல்லாக் கட்சிகளும் பயனற்றவை, பயனுள்ள செயலை ஆற்றலுடன் செய்யத்தனக்கே அறிவும் திறனும் உண்டென ஆர்ப்பரித்து, ஆள் சேர்த்து அரசியலில் ஆடிப்பார்த்தான். முசோலினி, ஹிட்லர், ஆகியோரின் இரகசிய உதவிகொண்டு, பிரிட்டனிலே ஓர் கலகம்நடத்தித், தானே சர்வாதிகாரியாகிவிட முயற்சி செய்தான்—அதிலே தோற்றான்.

அவன் தோற்றதுகூட அல்ல முக்கியம், அவன் தொழுதுவந்த வெறியர்களும் தோற்றனர். பாசிசம் படுதோல்வியுற்றது! நாசிசம் நசுக்கப்பட்டது.

இருந்தும், இந்தத் தலைவனுக்கு ஆசை விடவில்லை—மீண்டும் 'ஒரு கை' பார்ப்போம், என்று மேடை ஏறினர் அவனது ஆட்கள்.

போர்க்காலத்திலே சிறையிலே கிடந்தான் — யாரும் சீந்தாது போகவே, சீற்றத்தைச் செலுத்த இடம் தெரியாது, குமம்பிக் கிடந்தான். எப்படியோ மேடையிலே மீண்டும் ஏற அவன் படையினருக்கு ஓர் வழி கிடைத்தது. பிரிட்டிஷ் தொழிற்கட்சிக்குள் ஒரு பிளவு உண்டாயிற்றே, அதைத்தான் மாஸ்லி தனக்குச் சாதகமாக்கிக் கொள்கிறான் என்று கூறப்படுகிறது.

பிரிட்டிஷ் மக்கள், இந்த வேடிக்கையைக் கண்டு சிரித்தனர். என்றாலும், மாஸ்லி கட்சியை மேடையில் ஏற்றுவது, பொதுவாழ்வைக் கறையாக்குவதாகும் என்று கோபம் கொண்டனர்.

தோற்றுப்போன இந்தத் துரைமகன், துளியும் வெட்கமின்றி,

(5-ம் பக்கம் பார்க்க)

4-ம் பக்கத் தொடர்ச்சி

ஆண்டவனுக்காவது இரக்கமிருந்தா எனக்குச் சாவாவது வரவேணும்—அதுவும் இல்லே. எங்கேன்னு போய்த் தேடறது பணத்தை. எவன் கொடுப்பான் கடன்? திருடவும் தெரியாது.

(தள்ளாடி நடந்து செல்கிறான்)

* * *

சகிக்கமுடியவில்லே யல்லவா? சரி அவன் நிலைமை என்ன ஆகிறது என்று பார்ப்போம்.

கண்றாவிக் காட்சியைப் பார்க்க என்றால் முடியாதப்பா என்று கூறி விடவேண்டாம்.

இந்த மாதிரி சமயத்திலே கண்களை இறுக மூடிக்கொள்வதால்தான் உலகிலே பஞ்சமாபாதகம் நடைபெறுகிறது. கண்களையும் மூடக்கூடாது; ஊமையாகவும் இருக்கக்கூடாது. அதோ போகிறானே, இரக்கத்தைத் தேடித் தேடிப்பார்த்து, கிடைக்காததால் கதிகலங்கி அவன் இப்போது எதையும் செய்யச் சித்தமாக இருக்கிறான்—கொலே—களவு பொய்—சூது — வஞ்சனே —இவை எதுவும் முடியாவிட்டால், தற்கொலே, இவ்வளவுக்கும் அவன் தயார்! அவன் மட்டுமல்ல, உலகிலே அனேகர். இரக்கம் தேடினான் அல்லவா இவன். இவனே இப்போது இரக்கத்தைக் கைவிட்டுவிடுவான்.

* * *

(சின்னக் குழந்தையை வண்டியில்வைத்துத் தள்ளிக்கொண்டு ஆயா ஒருவள் வருகிறாள்.)

(திடீரென்று அவளுக்குக்காக் காய்வலிப்பு)

(கீழேவீழ்கிறாள்—வண்டிகவிழ இருக்கிறது)

(சோணாசலம், பார்த்துவிட்டுப் பதைத்தோடி வந்து வண்டியைப் பிடித்துக் கொண்டு, அவளையும் காப்பாற்றுகிறான்)

(அவள் கொஞ்சம் மூர்ச்சை தெளிந்ததும் கும்பிடுகிறாள்.)

ஆயா:- குலதெய்வம் போல வந்திங்கய்யா. கோடி புண்யம் உங்களுக்கு.

சோ:- ஏம்மா, உனக்கு இது மாதிரி வலி,............

ஆயா:- கொஞ்சநாளா இந்தச் சனியன் என்னேப்பிடிச்சிகிட்டுவாட்டுது—மந்தரம் மருந்து எல்லாம் செய்தாச்சி—

சோ:- மயக்கம் இன்னும் தெளியலே போலிருக்கே.

ஆயா:- ஆமாம்—ஆமா, குழந்தையைப் பொழுதோடே கொண்டு போய்ச் சேர்க்கோணும்—

சோ:- ஐயோ! பாவம்!

ஆயா:- இரக்கமான மனசய்யா உங்களுக்கு. உங்களாலேதான், புள்ளெ புழைச்சுது. வண்டிகவிழ்ந்து போயிருந்தா, என்ன கதியாவும் குழந்தை.

சோ:-குழந்தை, ரொம்பஅழகா இருக்கும்மா, யாருவீடு?

ஆ:-கலெக்டரய்யா வீட்டுக்குழந்தை.

சோ:-இலட்சணமா இருக்கு.

ஆ:-அதுக்குஎன்னங்ககுறை. கலெக்டரய்யா சம்சாரம், ஒரு பெரிய பணக்கார வீட்டுப் பெண்ணு. குழந்தைமேலே தாத்தாவுக்கு உசிரு. அவர்தான், நேத்துச் செய்து போட்டாரு, அந்தப் புதுசெயின். ஆறு சவரன்—

(மறுபடிமயக்கம்)

(கீழே சாய்த்துவிட்டு ஓடுகிறான், தண்ணீர் கொண்டுவர, சட்டி ஓட்டில் தண்ணீர் கொண்டு வந்து தெளிக்கப்போகும் போது, செயின் தெரிகிறது-புத்திமாறுகிறது-செயினேத்தூக்கிக்கொண்டு ஓடிவிடுகிறான்)

(அவ்வழியே ஒரு வாலிபன் வருகிறான்— கீழே வாயில்நுரை தள்ளியபடி விழுந்து கிடப்பவளேக் கண்டு, பச்சாதாபப்பட்டு)

அடடா! ஏழைபடும்பாடு, எப்படி எப்படி எல்லாம் இருக்கிறதப்பா. இந்த உலகிலே.

அம்மா! அம்மா!

(மெதுவாகக் கண் திறந்து மிரளமிரளவிழிக்கிறாள்.)

ஆயா :— மறுபடியும் வந்துவிட்டுது பாத்திங்களா அந்த மயக்கம்—நல்ல வேளே, நீங்க இருந்து, காப்பாத்தினிங்க.

வா :— மறுபடியும் மயக்கமா? இதற்கு முன்னே ஒருதடவை மயக்க்ம் வந்துதா உனக்கு.

ஆயா :— என்னய்யா இது, இப்படிக் கேட்கறே நீதானே, முன்னே, என்னேக் காப்பாத்தினே—

வா :— நானா?

(குழந்தையைப் பார்த்

ஆயா :— ஐயோ! செயி

பாவி! செயினேத் திருடிக்கிட்

(கூச்சலிடுகிறாள்)

(சிலர் ஓடிவருகிறார்கள்)

ஆயா :— ஐயா, இந்த அ யத்தைக் கேளுங்க. எனக்குக் காவலி வந்து விட்டது. ஐயாதான் காப்பாத்தினாரு — ம கம் தெளியறதுக்குள்ளேயே மறுப யும்வலிவந்துடுச்சி,நான்கீழேவிழுந்து விட்டேன் — என்னிடம் ரொம்ப பரிதாபம் காட்டி, பசப்பினான் இந்தப் பாவி—படுபாவி, குழந்தே கழுத்திலே இருந்த செயினே—

வா :— செ! ராஸ்கல்! யாரைப் பார்த்துத் திருடன்னு சொல்கிறே. ஆளேப்பார்த்தா கூடவா, மனுஷாளுடைய தராதரம் தெரியலே.

கும்பலில் ஒருவன் :— அடடே! மகா, தராதரம் கண்டவருடா இவரு. ஏண்டா! திருட்டுபயன்னா அவன் என்ன, சதாரம் டிராமாவிலே வருகிற திருடன் மாதிரியாகத்தான் இருப்பானா. உனக்கு என்ன வாய்! இவரு உருவைப் பார்த்தாலே, யோக்யருன்னு தெரியுதாம்.

வேறொருவன் :— நெத்தியிலே எழுதி ஒட்டி இருக்குது.

வாலிபன் :— டே! உளறாதிங்க. அம்மா! சரியாகப்பார்த்துச் சொல்லு. நானா, இதற்கு முன்பு உனக்குமயக்கம் வந்தபோது இருந்தேன்.

ஆயா :— ஆமாம்! ஐயோ! செயின் போயிடுத்தே. நீ தான் இருந்தே இங்கே. எனக்கு மயக்கமா இருந்தது, சரியாகப் புரியலேயே, வேறேஆள் இருந்தானோ என்னமோ, அதுவும் தெரியலே.

கும்பலில் ஒருவன் :— அந்த மாதிரியும் திருடறது உண்டு. இரண்டு ராஸ்கலா வந்திருப்பானுக. ஒருத்தன், தூக்கிகிட்டு ஓடிவிட்டிருப்பான்-இவன் அதை மறைக்க இங்கே நின்னுக்கிட்டு-ஜாலம் காட்டுறான்—டே! யாரு அவன், உன் பங்காளி—

(அடிக்கிறார்கள்)

(கான்ஸ்டபிள் அவன் கழுத்தைப்பிடித்துத் தள்ளிக்கொண்டு போகிறான்).

# அவர் தொடுக்கும் போர் ★

[இரா. நெடுஞ்செழியன்]

...பிராமணர்தானா?

...ஆமாம்—செட்டியாரவாள்! ஏன் ...தக் கேள்வி?

...ஏனா? கேள்வி கேட்காமல், ...ங்கே வருகிறவாளுக்கெல்லாம், ...சோறு போட, நான் என்ன, விஷய ஞானம் இல்லாதவனா? பிராமணர் என்றால் மட்டுமேதான், அவாளுக்கு, தானதருமம் செய்ய முடியும். பிராமணனுக்கு அன்னதானம் செய்பவனுக்குத்தான், பகவத் கடாட்சம் உண்டு என்ற சாஸ்திரம் தெரிந்தவனய்யா நான்!

ஆஹா! தர்மிஷ்டர் மட்டுமல்ல தாங்கள்—ஞானஸ்தராக இருக்கிறீர்.

பிராமணருக்குத்தான், தான தருமம் செய்யவேண்டும். அப்போது தான் 'புண்யம்' உண்டு. ஆகவே தான், நான் பிரதிதினம் 5 பிராமணாளுக்கு அன்னமளிக்கிறேன். சிலாக்யமான காரியம்! சரி! ஆனால், முதலிலே, நீர் பிராமணர் என்று எனக்குச் சந்தேகமறத்தெரியவேண்டும். ஆகையாலே, மார்பைக் காட்டுங்கள், பூணூல் இருக்கிறதா, என்று பார்த்தால்தான் எனக்குத் திருப்தி ஏற்படும்.

என்ன செட்டியாரவாள்! எங்கள் பேச்சிலே, நம்பிக்கை............ ....பூணூலைக் காட்டய்யா!

* * *

இந்த உரையாடலுக்குப் பிறகு, 'பூணூலை'க் காட்டியான பிறகுதான், அவர், செட்டியார், ஐந்து பிராமணர்களுக்கு, 'சீட்டு' கொடுப்பார், சாப்பாட்டுக்கு.

அவ்வளவு பிராமண பக்தி அந்தத் தனவந்தருக்கு. வேறு ஒரு செலவும் செய்ய அவருக்கு மனம் வராதாம். ஏராளமான செல்வம் — எல்லாம், "ரெடிகாஷ்!" அந்த நாட்களிலே, அவர் குடும்பத்தில், அண்ணன் தம்பி பாகம் பங்கிட்டுக் கொண்ட போது, ஆளுக்கு, இருபது இலட்சமாம்.

அந்த ஒரு பாகஸ்தரின் திருக்குமாரர், T. A. ராமலிங்கம் செட்டியார்.

மற்றொரு பாகஸ்தரின் அருங்குணந்தான், பூணூல் இருக்கிறதா என்று பார்த்துவிட்டு, தினம் 5 பிராமணர்களுக்கு 'அன்னதானம்' செய்வது! அத்தகைய பிராமண பக்தி, செட்டியாருக்கு. அந்தப் பக்தி, துளியும் குறையவில்லை, அவருடைய நாலு குமாரர்களிலே, ஒருவரும், நாடாளும் மந்திரியுமாகியுள்ள, அமைச்சர் அவனாசியாருக்குத் தமது பிராமண பக்தியைக் காட்டிக்கொள்ள, அவர் எடுத்துக் கொண்டுள்ள பல நடவடிக்கைகளிலே ஒன்று, இப்போது, பள்ளி ஆசிரியர்கள்மீது அவர் தொடுக்கும் பாணம்.

பள்ளிகளில் மாணவர் பயிற்சி பெற வேண்டி வைக்கப்படும் பல்வேறு துறைப் பாடங்களைச், சொல்லிக்கொடுக்க வேண்டிய கட்டுப்பாடுடையவர்கள் ஆசிரியர்கள். கல்வித் துறை அதிகாரிகள், எதைப் பாடத்திட்டமாக அமைக்கிறார்களோ, அதை அப்படியே ஆசிரியர்களும் சொல்லிக்கொடுத்து வருகிறார்கள். சென்ற சில காலமாக விழிப்புணர்ச்சி ஏற்பட்டு அறிவு விளக்கம் பெற்ற ஆசிரியர்களிற் சிலர், பகுத்தறிவுக் கண்கொண்டு ஆய்ந்து பார்த்து அறிவுறுத்தும் பண்புடையராகக் காணப்படுகிறார்கள். பகுத்தறிவுணர்ச்சியால் தூண்டப்பட்ட மாணவர்கள், அறிவுக்குப் பொருந்தாத எதையும் புறக்கணிக்கத் தலைப்பட்டனர். பழமை பற்றிய கருத்துக்கள் பெரும்பாலும் பகுத்தறிவுக்கு மாறுபட்டு விளங்குவதால் அவை புறக்கணிக்கப்பட்டன. பழமை வாழ்ந்தால் மட்டுமே வளமான வாழ்வு நடத்தக்கூடிய ஆரியர்கள், பகுத்தறிவுணர்ச்சியை எப்படியேனும் தடைபடுத்திப், பழமைக்கு உயிரளிக்க வேண்டிய நிலையில் பரம்பரை பரம்பரையாகத் தமிழகத்தில் வாழ்ந்து வந்துள்ளனர் என்பதை வரலாறுகள் பகரக் காண்கிறோம்.

பழமைக்கும், பகுத்தறிவுக்கும் ஏற்படும் போட்டி மற்றப் பாடங்களைக் காட்டிலும் தமிழ்ப் பாடங்களில் மிகவாக ஏற்படுகிறது. ஆகவே தான் தமிழாசிரியர்களிற் பலர் பகுத்தறிவுக் கண்கொண்டு பாடம் பயிற்றுவிக்கும் நிலையைச் சிலகாலமாக அடைந்து வருகிறார்கள். இந்த நிலையை அருவருக்கும் ஆரியர்கள் அமைச்சர் அவனாசியாரிடம் அடிக்கடி முறையீடு செய்து பகுத்தறிவுணர்ச்சி கொண்ட ஆசிரியர்களை அகற்றச் சென்ற சில திங்களாக முயற்சி செய்து வந்தனர். அமைச்சர் அவனாசிலிங்கனார் தமிழ் மரபில் உதித்த தமிழராதலால் தமிழாக்க முயற்சிகளுக்கு ஆதரவே நல்குவார் என்று நாம் எண்ணியிருந்தோம். ஆனால் அமைச்சர், ஆரியர்கள் முயற்சிக்கு ஆதரவு அளித்து அறிக்கைகள் வெளியிட்டார். பள்ளிகளில் மதத்திற்கு மாறுபட்ட பிரச்சாரமும், நாஸ்தீகப் பிரச்சாரமும் நடைபெறுகின்றன வென்றும், அவற்றை அடக்கத்தக்க நடவடிக்கைகள் விரைவில் எடுக்கப்பெறும் என்றும் கூறியிருந்தார். அண்மையில் அமைச்சர் அவனாசியார் வெளியிட்ட உத்தரவொன்றில் மதத்திற்கு மாறுபட்ட எந்தச்சொல்லும், செயலும் பள்ளிக்கூடங்களின் எல்லைகளுக்குட்பட்ட இடங்களில் நடைபெறக் கூடாதென்றும், ஆசிரியர்களின் செயல்கள் மாணவரையும் பாதிப்பதால் வெளியிடங்களிலும் ஆசிரியர்கள் மதத்திற்கு மாறுபட்ட பிரச்சாரமும், நாஸ்தீகப் பிரச்சாரமும் நடைபெறக்கூடாதென்றும் அப்படி நடைபெற்றால் அந்தக் குறிப்பிட்ட பள்ளிக்கூடங்களுக்கோ, அல்லது குறிப்பிட்ட ஆசிரியர்களுக்கோ . சர்க்காரால் கொடுக்கப்பட்டு வரும் உதவிப் பொருளை நிறுத்துவதற்குத் தக்க நடவடிக்கைகள் எடுத்துக்கொள்ளக் கல்வி அதிகாரிகளுக்கு அதிகாரம் அளிக்கிறாரென்றும் காணப்படுகின்றன. அறிவுப் பாதையில் முன்னேறி வரும் உலகில் இத்தகைய விசித்திரமான பிற்போக்கான உத்தரவு சென்னை மாகாணத்தைத் தவிர வேறு எங்கும் காண்டல் அரிது. தமிழார்வத்தால்துள்ளிக் குதித்து வீரம் பேசி தமிழாக்கம் தேடும் அரும்பணியில் ஈடுபடுவேன் என்று கூறி அமைச்சரான அவனாசியாரிடம் நாம் கொண்டிருந்த நம்பிக்கையை அடியற்ற நெடுமரம்போல அவர் வீழச் செய்வார் என்று நாம் கருதவேயில்லை.

மதக்கருத்துக்கு மாறுபட்ட, பகுத்தறிவால் தெளியப்பட்ட கருத்துக்களை எடுத்துக்கூறும் ஆசிரியர்களுக்குக் குறிப்பாகத் தமிழாசிரியர்களுக்கு வாய்ப்பூட்டு உத்தரவு போட்டதின் காரணம் பொருத்தமுடையதா என்று ஆய்ந்து பார்க்கு

றூன் கல்வியின் கடமையை உணர வேண்டும்.

பிரான்ஸ் நாட்டின் பேரறிஞரான ரூசோ "மனிதனைப் பிறந்த நிலையிலேயே விட்டுவிட்டால் அவன் ஒரு அரக்கனாக ஆகிவிடுவான். ஒருசெடியைப் பலபேர் நடக்கின்ற பாதையிலே வளரவிட்டால் அது எங்ஙனம் பலரால் மிதிபட்டு அழிந்துவிடுமோ அதைப்போல கல்வியில்லாத மனிதன் அழிந்துவிடுவான்" என்று கூறினார். மிருகத்தன்மையிலிருந்து மனிதத்தன்மையைப் பிரித்துக் காட்டுவதற்கு உறுகருவியாக விளங்குவது கல்வியேயாகும். அதாவது மக்களின் மனம் பண்பட கல்வி பயனாகிறது. அழிக்கும் இயற்கைச் சக்திகளை எதிர்த்து நின்று, அவற்றைத் தன் வயப்படுத்த மனிதனுக்குத் தேவையான அறிவாற்றலைக் கொடுப்பது கல்வியேயாகும். அத்தகைய கல்வி இல்லையாயின் இயற்கைச் சக்திகள் மக்களினத்தை அழித்தே தீரும்; மிதிபடும் பாதைச் செடியைப்போல் மக்கள் அழிவர். இதைத்தான் அறிஞர் ரூசோ "ஒரு செடி நன்றாக வளர்வதற்கு என்னென்ன தேவையோ அதைப்போன்று, மனிதன் பண்பாடு பெறுவதற்குக் கல்வி அவசியமானது" என்றார்.

காட்டுமிராண்டிக்காலத்திலிருந்து நாகரிகமுற்ற நல்ல காலத்திற்கு மனித இனம் நகர்ந்து வருங்கால் தேவைகள் அவ்வப்போது வளர்ந்து கொண்டு வருகின்றன. தேவைகள் வளரும்போது தேவைக்கேற்ற கல்வி முறையும் வளரும். கல்விமுறை வளரவளரக் கல்விக்கான பாடத்திட்டங்கள் அவ்வப்போது மாறும். முதல் நூற்றாண்டில் சொல்லிக் கொடுத்த பாடத்திட்டம் இருபதாம் நூற்றாண்டில் மாறுகிறது. இது இயற்கை. முதல் நூற்றாண்டில் நெருப்பு உண்டாக்குவதற்குச் சொல்லிக் கொடுத்த பாடத்திட்டம் சக்கி முக்கிக் கற்களை ஒன்றோடொன்று உராயச் செய்தல் என்பதாகும். இருபதாம் நூற்றாண்டில் கற்றுக்கொடுக்கும் பாடத்திட்டம் மின்வழியிலுள்ள இருவேறு வலிகளை ஒன்று சேரும்படி செய்தல் என்பதாகும். இது போலவே ஒவ்வொரு துறையிலும் படிப்படியாக எவ்வளவோ மாறுதல்கள் ஏற்பட்டுள்ளன. ஆகவே கல்விப் பயிற்சி அளிக்கும் பாடத்திட்டம் காலத்திற்கேற்ற கருத்திற்கிசைந்தவாறு மாறும்; மாறவேண்டும். இந்தக் கருத்தைத் தெள்ளத்தெளிய விளக்குகிறார் அறிஞர் ரூசோ.

"கல்வியானது, நாம் பிறக்கும்போது என்னென்ன இல்லையோ நாம் மனிதனான பிறகு என்னென்ன தேவையோ அவையனைத்தையும் நமக்குக் கொடுக்கின்றது" என்கிறார்.

தமிழாசிரியர்களும் பிற ஆசிரியர்களும் எந்தக்காலத்திலேயோ, எதற்காகவோ, எங்கேயோ ஏற்பட்ட ஒரு மதக்கருத்து, தாம் வாழும் நாளின் அறிவுக்கு ஏற்றதாக இல்லையாயின் அதனை மாணவர்களுக்கு எடுத்துக் கூறும் உரிமை அவ்வாசிரியர்களுக்கு இருக்கக்கூடாது என்று அமைச்சர் அவனாசியார் எண்ணுகிறாரா என்று கேட்க விரும்புகிறோம். இயற்கையைக் கொண்டும், சுற்றுச்சூழலை கொண்டும் நோக்கும்போது பொருந்தாத, பிற்போக்கான, பயன்படாத கருத்தாகப் பழைய கருத்து ஒன்று இருந்தால் அதனுடைய குற்றங்குறைகளை எடுத்துக் கூறவேண்டியது கல்வியின் நீங்காக் கடமையல்லவா. இதைக் கல்விமந்திரி மறுக்கிறாரா? உலகம் தட்டை என்று ஒருகாலத்தில் மக்கள் நம்பினர். அது அக்காலத்திற்கு ஏற்றதாக இருக்கலாம். அந்தக் காலத்தில் எழுந்த இலக்கியங்களில் அந்தக் கருத்து இடம் பெற்றிருக்கலாம். உலகம் தட்டையல்ல, உருண்டைதான் என்று மறுக்க முடியாத காரணங்களால் நிலை பெறுத்தப் பெறும் கருத்து வழங்கும் இருபதாம் நூற்றாண்டில் பள்ளிக்கூட தமிழ்ப்பாட புத்தகத்தில் உலகம் தட்டையானது என்றிருந்தால் தமிழாசிரியர் உலகம் தட்டை அல்ல உருண்டைதான் என்று எடுத்துக் கூறுவது குற்றமாகுமா? உலகம் தட்டை என்ற புராணக்கதையின் மீது எழுந்த புராணங்கள் பொய்ம்மையுடையன என்று தமிழாசிரியர் கூறினால் தவறா? இப்படிக் கூறுவதற்காக வாய்ப்பூட்டு உத்தரவைத் தமிழாசிரியர்களுக்கு இடும் கல்விமந்திரியாரின் செயல் நீதியா என்று கேட்கிறோம். இயற்கையறிவும், சூழ்நிலையும் ஒப்புக்கொள்ளும் பாடங்கள் கல்வி முறையால் சொல்லிக் கொடுக்கப்பட வேண்டும் என்பதை அறிஞர் ரூசோ "கல்வியை நாம் இயற்கையிலிருந்தும், உறவினரிடமிருந்தும், சுற்றுப்பக்கத்திலுள்ள மக்களிடமிருந்தும் பெறுகின்றோம்" என்றார்.

காலத்திற்கேற்ற கருத்தமையாத, பொருந்தாதபாடங்களைப்பள்ளிகளில் வைத்துவிட்டு, அவற்றிலுள்ள பொருந்தாக்கருத்துக்களை எடுத்துக் கூறக்கூடாது என்பது அறிவுக்கு விடுதலை வழங்கியதாக ஆகாது. இத்தகைய குறைபாடுகளை எடுத்துக் கூறுவோர் திராவிடர் கழகத்தாரும், சுயமரியாதைக்காரரும் மட்டுந்தான் என்று எண்ணவேண்டாம். 'சிலம்பு' என்னும் இதழ் வெளியிடும் கருத்தையும் காணுங்கள். 'சிலம்பு' திராவிடர் கழகத்தைச் சேர்ந்ததல்ல என்பதை அறிய வேண்டுகிறோம். 'சிலம்பு' வெளியிடுவது :—

"அம்பட்டன் முடிவெட்டுகிறான், இடையன் ஆடு மேய்க்கிறான், வண்ணான் கழுதை ஓட்டுகிறான், செட்டியார் பருப்பு விற்கிறார், அய்யர் வேதம் ஓதுகிறார்" என்று ஒரு குறிப்பிட்ட வகுப்பாரை 'அவன்' என்றும் ஏனையோரை 'அவர்' என்றும் பாடப் புத்தகங்களில் எழுதப்பட்டிருக்கிறது. இத்தகைய பிற்போக்கான புத்தகங்களை எழுதியவர் யார், இவற்றைப் பாடப் புத்தகங்களாக அங்கீகரித்தவர் யார், எனச் சிந்திக்கும்போது அவமானமும், ஆத்திரமும் பொங்குகிறது.

சிலர் தாமே உயர் குடிமக்களென வகுத்துக்கொண்டு, ஏனையோரை எள்ளி நகையாடி வருகின்றனர். இது எத்தனை நாட்களுக்கு? ரஷ்யாவின் 'ஜார்' ஆட்சியும், ஜெர்மெனியின் 'நாஜி' உயர் ஜாதிக் கனவும் மண்ணைக் கவ்வினபோது இந்த உயர் ஜாதி ஊசல் மட்டும் உய்யுமா?

ஒருவனை "அறிவுகெட்ட மடையா" என்றால் "ஆமாம் சாமி" என்று ஆமோதிப்பதைப் போல், தற்காலத்திய பாடப்புத்தகங்களை நெட்டுருப் போட்டு ஒப்புவிக்கவேண்டியிருக்கிறது. அதன் பயனாக, ஐந்து வயதுள்ள ஒரு "உயர் ஜாதி"ச் சிறுமகன் ஐம்பது வயதுள்ள "கீழ் ஜாதி"ப் பெருமகனை "டேய் முருகா!" என்றழைக்கிறான். இது குழந்தையின் குற்றமல்ல. நம் நாட்டைக்குட்டிச்சுவராக்கிய பாடப் புத்தகங்களின் குற்றம்.

இன்று செட்டியார் பருப்பு விற்பதை விட்டுத் தோல் பதனிடவில்லையா? அய்யர் வேதம் ஓதுவதை விட்டுச் செருப்புக்கடை வைக்கவில்லையா? இம்மாதிரி அவரவர் இஷ்டப்படி தொழில் முறையை மேற்கொள்

(2-ம் பக்கம் பார்க்க)

# திருவாங்கூர் தமிழர் நிலை

[S. K. சாமி, நாகர்கோயில்]

சுமார் அறுபது லட்சம் ஜனத்தொகையைக் கொண்ட திருவாங்கூர் சமஸ்தானத்தில் பதினைந்து லட்சம் தமிழர்கள் வாழ்ந்து வருகிறார்கள். 1941—ம் ஆண்டு திருவாங்கூர் அரசாங்கத்தாரால் வெளியிடப்பட்ட ஸென்ஸஸ் அறிக்கையில் இது குறிப்பிடப்பட்டிருக்கிறது. ஆறு மாதத்திற்கு முன்னர் ஐக்ய கேரளத் திட்டத்தை மறுக்கும் முறையில் சட்டசபையில் பேசிய அன்றைய திவான்ஜியும், இப்போது காலவேகச் சுழலில் அடிபட்டுப் பதவியை விட்டு விலகி நீலகிரி மலையில் வேதாந்த விசாரணையில் மூழ்கியிருக்கும் ஸர் ஸி. பி. ராமசாமி அய்யர் "திருவாங்கூர்சமஸ்தானஜனத்தொகையில் மூன்றிலொருபங்கு தமிழர்கள், இவர்கள் ஐக்ய கேரள அமைப்பு முறையை ஆதரிக்கவில்லை." என்று குறிப்பிட்டார். இந்தமுறையில் திருவாங்கூரில் ஏராளமாகத் தமிழர்கள் வசித்து வருகிறார்களென்று தைரியமாகச் சொல்லலாம்.

பேச்சுக்கு மட்டும் தமிழர்களா? தமிழர் என்று சொல்லிக் கொண்டு தமிழர்துரோகம்புரியும் கசடர்களா? இல்லவேயில்லை. தமிழுக்கும் தமிழ் நாட்டிற்கும் அரும்பாடுபட்டவர்கள். மனோன்மணியம் தந்த பேராசிரியர் சுந்தரம்பிள்ளை, ஆலயப் பிரவேச உரிமை என்ற அரிய நூலை ஆங்கிலத்திலும் தமிழிலும் இயற்றிய அறிஞர் பி. சிதம்பரம் பிள்ளை, கவிமணி தேசிக விநாயகம் பிள்ளை, சதாவதானி சேக்தம்பி பாவலர், ப. ஜீவானந்தம், கலைவாணர் என். எஸ். கிருஷ்ணன், ராவ்சாகிப் சிவராஜ பிள்ளை முதலியோர்கள் திருவாங்கூர் தமிழர்களாவார்கள். இப்பேற்பட்ட பெரியார்களிருந்துங்கூடத் திருவாங்கூரில் தமிழர் நிலை மிக மிகப் பரிதாபகரமானதாகவேயிருந்து வருகிறது.

திருவாங்கூரில் தமிழர்கள் எந்தத் துறையிலும் ஒதுக்கப்பட்டு ஏளனமாக மலையாளிகளால் மட்டுமல்ல, அரசாங்கத்தாலும் கருதப்பட்டு வருகிறார்கள். மேலேசொன்ன பெரியவர்களில் சிலர் சேர்ந்து தமிழர் சங்கம் என்று ஒரு ஸ்தாபனத்தைத் திருவனந்தபுரத்தில் பல ஆண்டுகளுக்கு முன்னர் ஏற்படுத்தினார்கள். கிளர்ச்சி செய்யப்போவதாகச் சொன்னார்கள். அதுபோது திவானாயிருந்த மலையாளி முக்யமான மூவருக்கு உத்யோகங்கள் கொடுத்துதவினார், தமிழர் சங்கம் என்ற குழந்தை பிரசவமாவதற்கு முன்னரே வயிற்றுக்குள்ளே செத்துப் போய் விட்டது. திருவாங்கூரில் வாழ்ந்து வந்த பாமரத் தமிழனுக்கு இந்தச் சங்கத்தைப் பற்றி யொன்றுமே தெரியாது,

மலையாளிகள் அட்டகாசம் வலுத்தது. அரசியலில் மலையாளிகள் கை வர வர ஓங்கியது. இதற்கு முக்ய காரணம், அரசாங்கமே மலையாள அரசாங்கம் என்பதுதான். தமிழரைத் தண்ணீர் குடிக்கும் தமிளர் என்று வாய் கூசாமல் மலையாள உத்யோகஸ்தர்கள் சொல்லும் நிலைக்கு வந்து விட்டார்கள். ஏன்? மனோன்மணியம் சுந்தரம்பிள்ளை, தமிழ் படித்த மலையாளி என்று கூறினான் ஒரு படித்த மலையாளி என்று தோழர் சிவஞான கிராமணியார் சொல்லிச் சொல்லி வருந்தும் காலமும் வந்து விட்டது. பெரிய புராணத்தில் குறிப்பிடும் நாயன்மார்கள் அனைவரும் நாயர்களென்று மலையாளிகளில் சிலர் இன்னும் வெட்கமில்லாமல் சொல்லி வருகிறார்கள்.

இது இப்படியிருக்கத் தமிழ் நாடு காங்கிரஸ் தலைமைப் பதவியில் அலங்காரமாக வீற்றிருக்கும் தோழர் காமராஜர் "திருவாங்கூரிலுள்ள தமிழருக்குத் தமிழ் படிக்கத் தெரியுமா?" என்று கேட்கிறார். யாரிடம் கேட்டார் தெரியுமா? திருவாங்கூர் தமிழர் குறையைச் சொல்ல வந்த திருவாங்கூர் தமிழ் நாடு காங்கிரஸ் தலைவர் தோழர் நத்தானியல் கோஷ்டியாரிடம். ஆனால் இந்தக்காமராஜர் ஒருவர் மட்டும்தான் இப்படித் தெரிந்து வைத்திருக்கிறாரே தவிர தமிழ் நாட்டிலுள்ளவர்கள் திருவாங்கூர் தமிழர்களுக்குச் சகல உதவிகளும் செய்ய முன்வந்திருக்கிறார்கள். விஷயமறிந்து காமராஜர் இப்போது திருவாங்கூர் தமிழர்களுக்காக ஏதோ செய்யப் போவதாகக் கூறுகிறார்.

இனி, திருவாங்கூரிலுள்ள தமிழர்கள் நிலையென்ன? கோரிக்கையென்ன? அது நியாயமானதுதானா? என்பவைகளைப்பற்றிச் சிந்திப்போம்.

கிருஸ்துவர், நாயர், தீயர்கள், தமிழர்கள் என்று நான்கு வகுப்பினர்கள் முக்கியமாகத்திருவாங்கூரில் வாழ்ந்து வருகிறார்கள். அரசியலில் கிருஸ்தவர்கள், நாயர்கள், தீயர்கள் ஆகிய மூன்று வகுப்பினருக்கும் தக்கஇடமுண்டு. நாயர்களுக்கு அதாவது மலையாளிகளுக்கு அரசியலில்அளவுகடந்த ஸ்தானமுண்டு. பதினைந்து லட்சம் தமிழர்கள் பாடுதான் மகா மோசம். தமிழர்கள் செய்யும் எந்தக்கிளர்ச்சியும் மலையாள சர்க்காரால் கடுமையாக வேரிலேயே நசுக்கப்பட்டு வந்தது.

திருவாங்கூரில் மொத்தம் முப்பது தாலூகாக்கள், இதில் ஏழு தாலூகாக்களில் பெருவாரியாகத் தமிழர்களே வசித்து வருகிறார்கள். அவைகளாவன:- தோவாளை, அகத்தீசுவரம் ஆகிய இரண்டு தாலூகாக்களைக் கொண்ட நாஞ்சி நாடு. இந்த நாஞ்சி நாடுதான் சமஸ்தானம் முழுவதிற்கும் உணவு கொடுத்து உதவுகிறது. நஞ்சைப்பயிர் இங்கே ஏராளம். நாஞ்சில என்றாலே ஏர் என்று பொருள். இந்த நாஞ்சி நாட்டைத் தொட்டுக் கிடக்கும் கற்குளம், விளவஸ்கோடு ஆகிய இரண்டு தாலூகாக்கள். இந்த நான்கு தாலூகாக்களும் தமிழ் நாட்டைச் சேர்ந்த திருநெல்வேலி ஜில்லாவையொட்டியே கிடக்கிறது. மத்யதிருவாங்கூரில் செங்கோட்டை தாலூகா. இதுவும்தமிழ்நாட்டைஅப்படியே தொட்டுக்கிடக்கிறது. இனி வடதிருவாங்கூரில் தேவிகுளம், பீருமேடு என்ற இரு தாலூகாக்கள் மதுரை ஜில்லாவைத் தொட்டுக் கிடக்கின்றன.

மேலே குறிப்பிட்ட இந்த ஏழு தாலூக்காககளிலும் நூற்றுக்கு தொண்ணூறு பாகம் தமிழர்கள் என்று சர்க்கார் கணக்கே தெளிவாகச் சொல்லிவைத்திருக்கிறது. இப்படியிருந்தும் இந்தத் தமிழர் வாழும் பிராந்தியங்களில் அரசாங்க நடவடிக்கைகள், அறிக்கைகள் அனைத்தும் மலையாள மொழியில் தான்இன்னும் நடைபெற்று வருகின்றன. இதனால் தமிழர் அடைந்த கஷ்

(2-ம் பக்கம் பார்க்க)

Edited Printed Published by C. N. Annadurai, M. A., at "Dravida Nadu" Press, 317—319 Hodgsonpet Conjeeveram.